தனிப்பிரதி 1 அணா வருட சந்தா ரூ. 5. REG. NO. M. 4455.

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர் C. N. அண்ணாதுரை M. A.

"தமிழுக்கு மதுவென்று பேர்!—இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்-செம்பயிருக்கு வேர்!"
[கவி பாரதி தாசன்]

மலர் 1 || காஞ்சிபுரம் 29—3—42 விசு—பங்குனி 16உ ஞாயிறு || இதழ் 4

# ஹிந்து ஹிட்லரிசம்!

பரதன்.



இத்தாலியரை முறியடித்த சீக்கிய சிங்கம். நாசிப் சிங். வயது 18! வல்லமையோ அபாரம்!

"பரதா! இதோபார், நீ இனிமேல் இந்திரன், வருணன், வாயு, அக்கினி, முதலிய தேவாதிகள் இல்லை என்று கூறிக்கொண்டிராதே' என்று ஒருநாள் நக்கீரன் கூறினர். இந்த வெடிகுண்டு வீச்சு என்னைத் தூக்கி வாரிப்போட்டுவிட்டது. நமது தோழர்களிலே நான் எத்தனையோ வகையானவர்களைக் கண்டிருக்கிறேன். அபிப்பிராயங்கள் அந்தர்பல்டி அடிக்கக் கண்டிருக்கிறேன். நமது தோழர்களிலே, நிழலைக்கண்டு மிரளுவோர், நெருப்புடன் விளையாடுவோர், நேர் வழி மறந்து நிந்தனையால் சிந்தனையைச் சித்தரிப்போர்கூட உண்டு. ஆனல் நக்கீரன் இங்ஙனம், தேவாதிகளுக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு பேச முன்வருவார் என்று எதிர்ப்பார்க்கவேயில்லை. நான் கேட்டேன், "என்ன நக்கீரரே! புத்தம்புதிதாகப் பேசுகிறீர். புதுமை ஏது கண்டீர்? தேவாதிகளின் திருக்கட்டாட்சம் எவ்விதந்தால், எப்போது தங்கட்குக் கிடைத்தது"

"தயவு கிடைத்ததாகவோ, தயவுகிடைக்கவேண்டுமென்று எதிர்ப்பார்த்தோ, நானு பரதா! பேசுபவன்" என்று நக்கீரன் அறையவே "அங்ஙனமிருக்க அக்னிமுதலான தேவர்கள் சார்பாகத் தாங்கள் பேசக் காரணமென்ன?" என்று மீண்டும் கேட்டேன்.

"கேள் இதைப் பரதா! இந்திரன் முதலான தேவர்கள் நந்தமிழ் மக்களில் பெரும்பாலானவர்களிடம் தோழமையுடன் இருக்கக்கண்டேன். நமது தோழர்களின் ஆடையைக் கண்டீரன்றோ, ஆயிரம் பொத்தல், கண்ணாயிரமுடைய இந்திரனின் கடாட்சமன்றோ அது! ஏழைமக்களின் வயிற்றிலே, சதா, மூண்டிருக்கும் பசித்தீயை என்னென்று கூறுவது, அது அக்னியின் அன்புப்பெருக்கன்றோ! பெரும்பாலான பஞ்சை மக்களின் உணவு, காற்றுத்தானே பரதா! வாயுவின் வாஞ்சனையல்லவா அது! தரித்திரத்தில் புரளும் மக்களின் கண்களைக் கண்டிருப்பீர், வருணான் பிரத்யட்சமல்லவா! இதுபோல், அந்தத் தேவாதிகள் காட்சிதருவதால்தான், நான் அந்தத்தேவாதிகளைக் குறைகூறுதிர் என்றுரைத்தேன்" என்று முடித்தார் நக்கீரன்.

நான் அவரது நகைச்சுவை பொருந்திய பேச்சைக்கண்டு சிரித்தேன். அவர் கூறினது, முன்னாளில், கவிகாளமேகம் பாடிய ஓர் பாடலின் சாயல்கொண்டது. இத்தகைய வேடிக்கைக்குத் தேவாதிகளின்கதை பயன்படுகிறதேயல்லாமல், கவைக்கு உதவுகிறதா! இவ்வாறு "ரட்சகர்களை" ஏட்டில் எழுதிவைத்துக் கொண்டு, கஷ்டத்திலேயே புரளும் மக்கள் இங்கிருப்பதுபோல் வேறெங்கும் கிடையாது என்னலாம். அற்புதக்கதைகளைக்காதுகுடையும் அளவுக்குக்கூறிடும் புராணீகர்கள் எவ்வளவு, இந்நாட்டில் வாழ்க்கையில் குடைச்சலோடு வதையும் மக்கள் எத்தனை கோடிபேர்! எவ்வளவு மகேஸ்வரர்களை, இந்துமதம், நம்முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறது, எவ்வளவு விமரிசையான விழாக்கள் நடத்த வைக்கிறது, விதவிதமான ஆராதனைகள் செய்யத்தூண்டுகிறது, இருந்துமென்ன, இருதயவலியில்லாத மக்கள் எங்கே இருக்கிறார்கள்? "பாதித்துதேபசி என்றுரைத்தால். செய்தபாபத்தைக் காரணம் காட்டுவார்"......... வேறென்ன நடக்கிறது, கூறுங்கள் யோசித்து! அந்தக்குருடன், இந்த முடவன், அதோகிடந்து இருமும் நோயாளி, துடிக்கும் கிழம், துவண்டுபோகும் குழந்தை, தோல்பொம்மையானமாது, தொப்பென வீழ்ந்து மாயும் பஞ்சை, மாடிழுக்கும் வண்டியை, மண்டையை முட்டுக்கொடுத்துத் தள்ளும் பாட்டாளி, மார் வெடிக்க தன் மக்கள் துடிப்பரே என்றெண்ணி மனம் வெடிக்க மூட்டை தூக்கிக்கட்டைவெட்டிக்கக்கூஸ் கழுவி, கால்கை பிடித்து வாழும் கூலிக்கூட்டம்—இந்த உருவங்களின் புலம்பலுக்கு, கேள்விகளுக்கு, குமுறலுக்கு, எங்கே ஐயா, பதில் கிடைக்கிறது! எங்கே ஆறுதல்! அவனவன் செய்தவினையை அவனவன்



காப்டன், ரைட் ஆனரபிள் டேவிட் மார்கிசான், பிரிட்டிஷ போர் இலாகா காரியதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அனுபவிக்கிறான் என்றும் அன்றெழுதியதை அழித்தா எழுதமுடியும் என்றுங்கூறுவதைத் தவிர வேறு பேச்சுக்கிளம்பிற்று!

வினை, எழுத்து, விதி, சோதனை இவைகள் தூளாயின தெரியுமோ, சம்மட்டியும் அரிவாளும் ஆளும் ரஷியநாட்டிலே, 'அன்று எழுதியதை' லெனின் அழித்து எழுதிக்காட்டினார். அவதியுற்றோரை வாழச் செய்தார். அருள் மொழியால் அல்ல, தேவாலயஞ் சுற்றியல்ல; தமது தீரத்தால், வீரத்தால், நெஞ்சுறுதியால்!!

பாதிக்குதே பசியென்றுரைப்போரும், 'அது உன் பாபம்' என்று பதிலுரைப்போரும், அங்கு இல்லை! **"மத ஓடத்திலேறிய மாந்தரே பலி பீடத்தில் சாய்ந்தீரே!"** ஆம்! வைதிக பீடத்துக்கு நீங்கள் இங்கு பலியானீர்கள்! வாழ்வெனுங்கடலைக் கடக்க மதமெனும் ஓடமேறினீர். பார்ப்பனியமெனும் சண்டமாருதம், அந்தஓடத்தை, வைதீகம் எனும் பாறைமீது மோதச்செய்தது, அந்தப்பலிபீடத்திலே சாய்ந்தீர்; இரத்தந்தோய்ந்த அந்தப்பலிபீடத்தைப் மனக்கண்படைத்தோர் காண முடியும்!

அந்தப்பலிபீடத்திலே சாய்ந்தவரின் தொகை கணக்கினில் அடங்காது!

அந்தக்கடலைக்கடந்தாக வேண்டுமென்பதற்காக மத ஓடமேறியவர்கள் பலிபீடத்திலே சாய்ந்தனர். வேறுசிலர், ஓடத்தில் ஏறாது, கடலை நீந்திக்கடக்கத் துணிந்து, சுறாவுக்கும், சுழல் அலைக்கும், விஷப்பூச்சிகளுக்கும் இரையாவதுபோல், களவு, கொலை, கடுந்தொழில், ஆகிய காரியங்கள் செய்தேனும் பிழைப்போம் என்று ஆரம்பித்து, தண்டனையும் நிந்தனையும் பெற்றுத் தலைசாய்ந்தனர். இத்தகைய பல எண்ணங்களை, என்மனதிலே எழுப்பின, நக்கீரனின் பேச்சு. ஹிந்து மார்க்கத்தில் கிடந்துழலும் மக்களுக்கு மீள மார்க்கம் கிடைக்கவேண்டும்.

சர். ஸ்டாபோர்டு கிரிப்சோ, மிஸ்டர் சர்ச்சிலோ, தாமாக மனமுவந்தோ, நம் நாட்டுத்தலைவர்களின் கூட்டு எச்சரிக்கையைக் கேட்டபிறகோ, இந்தியாவை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்தும், பிணைப்பிலிருந்துங்கூட விடுவித்து விடலாம்.

ஐரோப்பாவில், அதிவேகமாகப் பரவிவிட்ட ஹிட்லரிசத்தை, ஜனநாயகக் கோட்பாடுடைய நாட்டுப் படைகள், ஜெர்மனியிலிருந்தே விரட்டி விடமுடியும்.

ஹிந்து ஹிட்லரிசத்தை, பார்ப்பனியபாசிசத்தை, ஆரிய ஏகாதிபத்தியத்தை, சர். கிரிப்சாலும், இந்நாட்டிலிருந்து தொலைக்க முடியாது, ரூஸ்வெல்ட்டாலும் இயலாது.

அட்லாண்டிக் சாசனத்தினால், ஆரிய ஆதிக்கம் அகற்றப்பட வழிஏற்படாது. ஹிந்துஹிட்லரிசத்தை, இந்நாட்டுப் பழம்பெருங் குடிமக்களாகிய நாம் முனைந்தால்தான் முறியடிக்க முடியும்.

ஹிந்து ஹிட்லரிசத்துக்கு, வீட்டுக்கு வீடு, ஐந்தாம்படை இருக்கும். தகப்பனோ, தாயாரோ, தாய்மாமனோ, ஹிந்து ஹிட்லரிசத்தின் ஏஜண்டாகஇருந்து கொண்டு, அந்த ஹிட்லரிசத்தை எதிர்க்கும் தோழர்களைத் தொலைத்துவிடவும் தயாராக இருப்பர். நாட்டுக்கு உண்மையான விடுதலை வேண்டுமென்றால், இந்த ஹிந்து ஹிட்லரிசத்திலிருந்து நாம் தப்ப வேண்டும்.

ஹிட்லரிசம், சாந்தம் சமாதானம் சுபீட்சம்என்று பேசிக்கொண்டே சமரிலும், சதியிலும், சித்திரவதையிலும் இரண்டறக்கலப்பதுபோல், ஹிந்து ஹிட்லரிசம், பக்தி, பரமன், அருள், என்றுரைக்கும் ஆனால், உள்நோக்கம், அடிமைத்தனத்தைப் பெரும்பாலான மக்கள் மீது சுமத்தவேண்டும் என்பதுதான். ஹிந்து ஹிட்லரிசத்தால், உள்நாட்டில் குழப்பம், பிளவு, பேதம், அன்றுதொட்டு இன்றுவரை இருக்கிறது. ஒருகுலம், மற்றக் குலத்தை, மங்கி மடியச்செய்கிறது.

உழைப்பிலே செக்கு மாடுகள், உணர்ச்சியிலே செம்மறியாடுகள், என்று கூறத்தக்க விதத்திலே தமிழர் உருமாறிப்போனது, ஹிந்து ஹிட்லரிசத்துக்கு அடிபணிந்த காரணத்தாலேதான்.

புலி என இருந்தோர் இன்று பலர் முயலென வாழ்கின்றனர். வெகுசிலர் ஆமைபோல், (தீரத்தை) தலையை நீட்டுவதும், ஆளரவங் கேட்டதும் உள்ளுக்கு இழுத்துக் கொள்வதுமாக உள்ளனர். ஹிந்து ஹிட்லரிசத்தால், ஒருகுலம், உழைக்கவேண்டிய அவசியமற்று, பிறரின் உழைப்பை உறுஞ்சும் கூட்டமாகிவிட்டது. இதனால், அக்குலத்துக்கும் மற்றைய குலத்துக்கும் பகைமை மூண்டது. சிற்சில நேரங்களில் சுவாலை தென்படுகிறது, பிறசமயத்தில் கனல் வீசுகிறது, மூடபக்தி எனும் மூடுபனியால், சில சமயம் இந்தப்பகைமை, நீறுபூத்த நெருப்பெனக் காணப்படுகிறது. ஆனால், தீப்பொறிகள் திக்கெங்குங்கிளம்பி விட்டன. தீயணைக்கும் படையின் திறமை நெடு நாட்களுக்கு உபயோகமாகாது.

இத்தகைய ஹிட்லரிசத்தை, வெறுத்துக் கண்டித்து வேரறக் களையவேண்டிய முழுப்பொறுப்பு, தமிழருடையது. முஸ்லீம்கள், அதன் முடிவணங்க மறுத்து மூலப்பொருளைச் சேவிக்க இந்த சால வித்தைகள் ஏதுக்கு? என்று கூறிவிட்டனர். அவர்களை, ஹிந்து ஹிட்லரிசம், மதத்துறையில் ஏதும் செய்ய முடியாது. அஃதேபோல் கிருஸ்தவர்களிடமும் இந்து ஹிட்லரிசம்நடவாது. மதத்துறையில் இஸ்லாமிய, கிருஸ்தவத்தோழர்கள், ஹிந்து ஹிட்லரிசத்திடமிருந்து தப்பி விட்டனர். அரசியல் துறையில்அன்றோ, சிதைக்க வைக்கும் சூதுதான், காங்கிரசின் கூட்டுறவுடன் ஹிந்துஹிட்லரிசம் செய்யக்கருதுகிறது. ஜனாப்ஜின்னா, அத்தகைய நிலைகூடாது என்பதற்காகத்தான், தனி ஆட்சித்திட்டம் வகுத்துள்ளார். நாமோ ஹிந்து ஹிட்லரிசத்திடம் சிக்கிக்கொண்டு, சிந்தை நொந்து வாழுகிறோம். இஸ்லாமியர் டிகாலேபோல், அரசு இழந்து இருப்பினும் ஆர்வம் இழக்காது உள்ளனர். நமது பிரமுகர்கள், ஆட்சியில் இருப்பினும் பெட்டெயின் போல், ஹிந்து ஹிட்லரிசத்தின் எடுபிடி ஆளாக உள்ளனர்.

ஹிந்து ஹிட்லரிசம், எவ்வளவு சாதாரணக்காரியத்திலும் தடை உத்தரவுகள் பிறப்பிக்கிறது தெரியுமோ. சென்ற வாரத்துப் பத்திரிகைகளில் ஒரு அரிய செய்திகண்டேன். அஹோபிலமடம் ஜீயர் ஸ்வாமிகள்; வைணவத் தோழர்களுக்கோர் தாக்கீது பிறப்பித்துள்ளார். கிராப்புத்தலை அநாசாரமாம். இனி, வைணவர்கள், தலையில் குடுமிதான் வைக்கவேண்டுமாம்! கிராப்புத் தலைகளைக் காணச்சகிக்கவில்லையாம். இத்தகைய சாதாரண விஷயங்களில்கூட நுழைந்துவிடுகிறது ஹிந்து ஹிட்லரிசம். பார்ப்பனப் புரோகிதர்களனைவரும் இந்த ஹிட்லரிசத்தின் கெஸ்டாப்போக்கள்! நமது "பழமை விரும்பிகள்" அனைவரும், அதற்கு ஐந்தாம் படைகள்! வேதாந்திகள் அதன் பாராசூட் படையினராவர்! ஏனெனில் அவர்கள் மாயத்தைப் பற்றிப்பேசிவிட்டு, மண்டல வாசிகளின் மனதில், பாரசூட்படையினர்போல் குதித்து விடுகின்றனர். இவைகளைக் கடந்து முன்னேறும் விறுவிறுப்பான துருப்புகள் தேவை ஹிந்து ஹிட்லரிசத்தை முறியடிக்க. பிரிட்டிஷார், இந்நாட்டு மக்கள், ஹிந்துஹிட்லரிசத்திடம் சிக்கிக்கொண்டதைக்கண்டே, இங்கு ஆளமுடியும் எனத்துணிந்தனர். இல்லையேல் 40 கோடிமக்கள், உலகில் வேறு எங்காகிலும் அடிமைப் பட்டிருக்கின்றனரா? புது அரசியல் திட்டம் வகுக்குங்காலங்களில், முஸ்லீம்கள், இந்துக்கள், என்று பெரும்பிரிவுகளாகமட்டும் பிரித்துப்பேசும், பேதமை பிரிட்டிஷாரை விட்டபாடில்லை. நாம் இந்துக்களல்ல! நாம்

# "திராவிட நாடு" பற்றித்

## தோழர் S. சோமசுந்தர பாரதியார், M. A., B. L.. அவர்கள் விடுத்த

# நற்செய்தி.

பசுமலை 15-3-42.

"திராவிட நாடு" எனும் புதிய தமிழ்ப்பத்திரிகை ஆசிரியர் திரு. C. N. அண்ணாத்துரை அவர்களுக்கு

**நற்றமிழர்க்குற்ற நண்பரே! நலம்.**

தங்கள் அன்புமிக்க முடங்கலும், புதிய "திராவிட நாடு" பத்திரிகைப் பிரதியொன்றும் வரப்பெற்றேன்; படித்து மகிழ்ந்தேன். "விடுதலை" யிழந்த தங்கள் தமிழ் வீரம் வீண்போகாது, பழையதிராவிட நாட்டின் முன்னேற்றத்திற்குத் துணையாகப் புதிய "திராவிட நாடு" எனும் படையைக் கையாள முன் வந்த நற்செய்திக்கு முகமனும், தங்கள் தளராத தமிழ்த் தொண்டுக்கு வாழ்த்தும் கூறுகிறேன். தங்கள் கருத்துக்களோடு மொவ்வாமல் சில வேறுபாடுடைய சிலரிருத்தல் கூடும். ஆனால், யாருக்குமிளையாத தங்கள் நாட்டன்பும், மொழியார்வமும், பொதுமக்கள் நல்லுரிமை பேணிச்செய்யும் மறப்போர்த்திறனும் சிறந்ததென்பதை மறுக்கும் சிறுகுணத்தார் தமிழ் நாட்டிலிருக்க முடியாது. தங்நலப்புன்னகை நரிகளும் ஓநாய்களும் தங்களுக்கஞ்சி வெறுப்பது உலகறிந்த செய்தி. தற்காலத் தமிழுலகம், வறுமையும் "அடிமை" நோயும் வருத்தத் தம் உள்ளத் தூக்கமின்றி நோதுமற் தூக்கத்திலாழ்ந்திருப்பதால் தங்களைப் போன்ற தமிழ் வீரரின் அருமையைப் பாராட்டி ஆதரிப்பார் அருமையிலருமையாகும். தமிழராதரவை எதிர்பாராமல், அவர் பராமுக நொதுமலுக்குத் தளராமல் உழைப்பது தம்போன்றாரியல்பும் துணிவுமாகும். ஆயினும், படையெடாமலே அருச்சுனனுக்குதவிய மணிதக்கடவுள் போலவேனும், தமிழ்ப் பெரியார் தோன்றாத்துணையாயிருந்து கைகொடுப்பாரென்றுநம்புகிறேன். நம்மவருள்ளத்தில் நல்லெண்ணமும் நன்முயற்சி யீடுபாடும் நாளும் தளராமல் வளரும்படியருளுமாறு தமிழ்த்தாயை வழுத்துகிறேன். தங்கள் "திராவிடநாடு"; தலைநின்றோங்கி நாட்டுநலம் வளர்க்கப் பல்லாண்டும் கூறுகிறேன். நிற்க.

இன்னும் தூக்கமா என்னும் பாட்டை இடிமுழக்கம் போல நாடு முழுதும் முழக்கித் தமிழரைவிழித்தெழச் செய்வதின்றியமையாதது. காங்கிரஸ் காரரைச் சிரித்தும், காந்தியடிகளின் புது வேதாந்த மதுவைப் புறக்கணித் திகழ்ந்தும் பேசியும் எழுதியும் வருவதினில் போகாது. நீதிக்காக யாதும் உரிமை நமக்குதவாத ஆங்கிலர், பகைப்படை மோதுவதைத் தாங்காமல் துணைவிரும்பி இந்தியர்க்கு முற்றுரிமை தருவதாய் முழங்குவதைக் கேட்கின்றோம். உண்ணாட்டாட்சியிலோரளவு என் பேரளவு எப்படியும் அகில இந்திய அரசியலில் கொடுத்துவிடப் பார்க்கின்றனர். தரவும் போகிறார்கள். நாமுறக்கம் தெளியாமல் வாளாவிருந்தால் காங்கிரசார் கொடிபறக்கநாடாளத்தொடங்குவார்கள். அப்போது தமிழர் நிலையாதாகும்? தமிழ்நாடு தவிர மற்றைப் பெருநாட்டு மாகாண மனைத்தும், மொழியாலும், கருத்தாலும், வாழ்க்கை நோக்கப் போக்கோடு நெடுங்கால ஒழுக்கமுறை வழக்காலும் ஆரியரின் ஒருப்பட்ட நாகரிக முடையதாகும். ஆதி தெரியாத பழங்காலந் தொட்டின்றுவரை யாரியரின் வேறுபட்ட வாழ்க்கைமுறை மனப்பாங்கு சமுதாயக் குடியமைப்பு, பொருளுடைமை, தொழிலுரிமை, பல விதத்தும் வேறுபட்டோர் தமிழராவர். அடிமைநிலை வெறுப்பும் மக்கள் முழுதுரிமைத் தமிழராட்சி விருப்பும் தமிழருக்கு மற்றெல்லா வகுப்பினர்க்கு மேலாக, வுண்டென்ற உண்மையாரு மறுக்கமாட்டார். ஆனால் ஆளெண்ணிப் பலர்சேர்ந்த கூட்டத்தாராட்சிக்கீழ் எல்லாரும் வாழ நேர்ந்தால், அகில இந்திய ஆரிய நோக்கால் தமிழகத்தை யரைக்க நாளும் தேய்ந்துடைந்து தமிழோடு தமிழர் தனிக்கலைபுணர்வும், நாகரிக வாழ்வும் போகும். அதற்காக, நாடாளும் நலவுரிமை நமக்கு வேண்டாமென நினைக்குந்தமிழனில்லை. முற்றுரிமை நமக்கு வேண்டும். முன் காங்கிரஸ் கூட்டம் துணிந்தபடி மொழிவாரி மாகாணம் பிரியவேண்டும். பிறமொழியார் எவ்வாறு துணிந்தாலும் தமிழ் நாடு குறையாத முற்றுரிமை யாட்சியொடு, பிறராலே என்னாளும் எனைத்தளவும் பிறழாத பெற்றியும் பெறுதல் வேண்டும். இந்திய நாட்டை ஓராட்சி யொரு நாடாய் ஆக்குவதைத் தடுக்க வேண்டும். தனியாளும் பலநாடு தம்மிற்கூடிப் பொதுவான சிலதுறையில் மட்டும் மத்திக்கூட்டாட்சியாளருக்கு ஆதிக்கம் தருவதென அமைத்தல் வேண்டும், தேசவரசியலார்க்குக் கூட்டாளி நாட்டாரினாட்சியிலே எவ்விதத்தும் எனைத்தளவும் தலையிடுதற்கிடமிருக்க விடலாகாது. பொருட்டுறையில் கூட்டுகளில் கூட்டுநோக்க வரம்புள்ளே பொதுவாளும் உரிமையுண்டு. அதன்புறத்தே அவரவரின் வாழ்வுமுறை மனையுரிமைத் துறைகளிலே தொடர்பொன்று மில்லாமை முறையாகும். அதுவே போல், முதலமைப்பில் தேசத்தின் பொதுவுக்குக் கூடும் நாட்டாருடன் பட்டுத் தருமளவே என்றிருக்க, பிறகு மற்றக் கூட்டத்தார் தாமாகப் பிறதுறையிலதிக்கம் கூட்ட இடமிருத்தல் கூடாது. சுருக்கமாக, இந்தியதேசம் மத்தியரசியலார்க்கு ஏஞ்ஞான்றும் ஆதிக்கம் எடுத்துக்கொள்ள இயலாத முறையினிலே கூட்டாட்சியமைதல் வேண்டும்; ஒரு நாடாய் உருக்கியடித்தொன்றாக்காமல், பொருளாக்கம் படையமைப்பு எல்லாமுள்ள முற்றுரிமையிழவாத தனியாளும் பல நாட்டின் கூட்டாக மட்டுமது அமையவேண்டும். (India should be a federation of equal and fully autonomous states, and not an over Centralised federation of mere Provinces) இது கூடாதாயின், துவக்க முதலே தமிழகத்தைப் பிரித்து வேறு தனிநாடாய்த் தன்னரசும் தனியாட்சி முறையும் கொண்டமைய ஏற்பாடு செய்வதொன்றே நன்றாகும். மறந்து செத்தால் போனவுயிர் மீண்டும் பெற இயலாதன்றோ. அதுபோலஇத்தருணம் தமிழ்த் தலைவர்கள் உறங்காமல் உரிமைகளை இழவாமல்போரிட்டுப் பேணுதற்கு மடிதட்டி விரைதல் வேண்டும். ஊரூராய்ச் சென்றெவர்க்கு முணர்வூட்டிப் பிறர்க்கடிமையாகாமல் தமிழ்த் தலைவர்கள் முயலவேண்டும். தமக்கிடையே சிறுசண்டை ஊடல்களை யொரு பக்கம் ஒதுக்கவேண்டும்; ஒத்துழைத்துத் தமிழர் பொது உரிமைகளைப் பேணுவதிற் சிறிதளவும் தாழ்த்தல் பெருங்கேடாகும்.

---


### "பாக்கிஸ்தான் போர்"

பாக்கிஸ்தான் மறுப்பை மறுத்தும் திராவிடஸ்தான்-பாக்கிஸ்தான் கொள்கையை விளக்கியும், பொள்ளாச்சி பி. கே. பாபுசாஹிப் எழுதிய தமிழ்நூல் தனிப்பிரதிவிலை 6-அணா. தபாலில்வர 0—6—9. சங்கங்கள் 0—2—3 ஸ்டாம்பு அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

கிடைக்குமிடம்:- **P. K. கான் சாஹிப்,**

**மெஸர்ஸ் S. P. S. கம்பெனி,**

ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்.

# பாமாவின் பிரார்த்தனை

(காப்பியன்)

முன்பு.

[கர்ணம்வேலை பெற முடியாதுபோன சரவணமுத்து ஆரிய சாகசத்துக்கு அடிமையாகிறான். பழைய கர்ணத்தின் இளம்விதவை பாமாவின் நேசம் பெறுகிறான். புதுக்கர்ணம் சிதம்பரய்யரிடம் சேவைபுரிகிறான் பிறகு.........]

சில மாதங்கள் கழிந்தன. சரவணமுத்துக்கும் அவன் மனைவிக்கும் அடிக்கடி சச்சரவுகள் நிகழத் தொடங்கின. "இருக்கிற வேலைகளைப்பார்த்தாலே போதுமானது. சர்க்கார் வேலையும் வேண்டாம், அதைப் பழகுவதற்கு இரவு பகலாக ஐயர் வீட்டிற்கு அடிமைத் தொழில் செய்யவும் வேண்டாம்" என்று கண்டிப்பாகக் கூறினாள் அவன் மனைவி.

சரவணமுத்துக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. கைகள் துடித்தன. நன்றாகப்புடைத்து, உதைத்துவிட்டான் மனைவியை! அவள் ஓலமிட்டு அழுதாள். அப்புசாமிப்பிள்ளை வந்தார். வெகு ஆத்திரத்தோடு கணவனுக்கும் பாமாவுக்கும் உள்ள சம்பந்தத்தை உடைத்துவிட்டாள் அந்தப்பெண். பிரமித்துவிட்டான் சரவணமுத்து! அசைவற்று நின்றுவிட்டார் அப்புசாமிப்பிள்ளை! அவரது அறிவு குழம்பியது. "வந்துவிட்டது குடும்பத்திற்கு மோசம்!" என்று வேதனைக்குரலில்சொல்லி, நெற்றியைக்கையால் பிடித்தவண்ணம், பெருமூச்சுவிட்டுக்கொண்டு உட்கார்ந்து விட்டார் பெரியவர்! அவர் உடல் குன்றிக்குறுகிப் போய்விட்டது.

"அப்படிப் பெரியதவறொன்றும் நான் செய்துவிடவில்லை. உங்களைப்போல எனக்குக் கல்நெஞ்சமில்லை. இதற்காக எதுவந்தாலும் வரட்டும்!" என்று மிடுக்காகச் சொல்லிவிட்டு வெளியே சென்றான் சரவணமுத்து.

கர்ணம் சிதம்பரய்யர் கோவைக்குச்சென்று நான்குநாட்களாகின்றன. குடும்பசம்பந்தமாக மருத்துவரிடம் கலந்து பேசப்போயிருக்கிறாராம். அங்கு நிகழும் பேச்சு தன்சம்பந்தப்பட்டதென்பதை பாமா நன்கு அறிவாள். அவள் மனம் கலங்கிற்று!

"என்ன மோசமான உலகம்!" என்று முனகிக்கொண்டே சேஷய்யர் வீட்டினுள் நுழைந்தான் சரவணமுத்து.

"யாரைத் திட்டுகிறாய்?" என்று கேட்டவண்ணம் எதிர்ப்பட்டாள் பாமா. மேலும் அவள் வேதனையோடு சொன்னாள் "நாளையதினம் ஐயர் வந்துவிடுகிறாராம். அப்புறம் நான் எங்கோ நீ எங்கோ! இன்றிரவுதான் நம்முடைய கடைசி இரவு! நம்மைப்பற்றி ஊரில் ஒரே புகாராயிருக்கிறதாமே! ஐயோ! என்னால் உனக்கு எவ்வளவு கெட்டபெயர், எவ்வளவு மானக்குறைவு! ஏனோ நான் பெண்ணாய்ப்பிறந்தேன்!"

"என்னைப்பற்றியென்ன. நான் ஆண்பிள்ளை, உங்களைப்பற்றி நினைக்கும்போதுதான் என் நெஞ்சு உடைந்துவிடும் போலிருக்கிறது! இவைகளுக்கெல்லாம் பரிகாரமேயில்லையா?" என்று வினவினான் சரவணமுத்து. அவன் குரல் தடுமாறிற்று. கண்களில் நீர் சுரந்தது.

பாமா தன் முந்தானையால் அவன் கண்களைத் துடைத்தாள். கட்டித்தழுவினாள். "என் அரசே!, எவ்வளவு அன்பு இப்பாவியிடம்!" என்றுகூறி முத்தமிட்டாள் அவன் கன்னங்களில்.

கோவையில் மருத்துவர் வீட்டில் சிதம்பரய்யர் தங்கியிருந்தார். சரவணமுத்து பாமா சம்மந்தமாகத்தான் சந்தேகமுற்றது நேரில், கண்டது ஊரில் பேசிக்கொள்வது ஊர் நிலைமை, யாவற்றையும் மருத்துவரிடம் விரிவாகச் சொன்னார் கிழவனார். மருத்துவருக்கு இவைகளெல்லாம் கேட்க வருத்தமாய்த்தானிருந்தது, என்றாலும் அவர் காரியத்திலே கண்ணுள்ளவர். அவர் கேட்டார் "இது கிடக்கட்டும். அந்த விண்ணப்பதாரர்கள். உங்களுக்கு வேலைகொடுக்கது நியாயமற்றதென்று போர்டுக்கு முறையீடு செய்துகொள்ளப் போகிறார்களாமே! உண்மைதானா?"

"ஆம்! அப்படித்தான் கேள்விப்படுகிறேன்" என்றார் கிழவர்.

"நாம் அதையல்லவா முதன்மையாகக் கவனிக்க வேண்டும். இதெல்லாம் சில்லறை விஷயங்கள். பின்னால் சரிப்படுத்திக்கொள்ளலாம். அந்தவூரில் தற்பொழுது சரவணமுத்துவின் குடும்பத்தைத்தவிர நமக்கு வேறு ஆதரவு கிடையாது. அவர்களையும் பகைத்துக் கொண்டால் நமது காரியம் கெட்டுவிடும். அண்ணாவின் குடும்பச்சொத்துக்கும் உமதுவேலைக்கும் மோசம் வரும். ஆகவே நாம் கண்ணையும், காதையும் கட்டுப்படுத்தித் தக்க விதமாகத்தான் நடந்துகொள்ளவேண்டும். யாரையும்கண்டிக்கவேண்டாம். எப்படியாவது முயன்று ஊருக்குள் ஆதரவும், செல்வாக்கும் தேடிக்கொள்ளுங்கள். "மானத்தைவிட நமக்கு வாழ்வுபெரிது!" சரவணமுத்தைப் பிறகு நான்பார்த்துக்கொள்கிறேன்." என்று கூறினார் மருத்துவர்.

சிதம்பரய்யர் ஊர்திரும்பினார். பாமாவையோ சரவணமுத்தையோ அவர் கண்டிக்கவில்லை. எப்பொழுதும் போலவே இருந்தார். இது அவர்களுக்கு வியப்பையளித்தது! அவர்களும் எப்பொழுதும்போலவே இருந்தார்கள்!! "தன்னைக்கோவைக்கு அழைத்துச் சென்றுவிடுவார்களோ" என்று கலங்கித்தவித்த பாமாவின் உள்ளம் பூரித்து மகிழ்ந்தது.

இங்ஙனம் சில மாதங்கள் கழிந்தன. கர்ணம் வேலை சம்பந்தப்பட்ட "முறையீடு" போர்டுவிசாரணையிலிருந்தது. அதற்குள் எப்படியோ, என்னென்னவெல்லாமோ செய்து சிதம்பரய்யர் சில பெரியமனிதர்களின் ஆதரவைப் பெற்றுவிட்டார். "ஐயர் மனம்வைத்தால் ஆகாதகாரியமுண்டோ?" ஊருக்குள் செல்வாக்கு வேரூன்றத்தொடங்கிற்று. அதற்கு நீர் விட்டுவளர்த்தான் சரவணமுத்து. கோவைமருத்துவர் இருமுறை ஊரில்வந்து தங்கியிருந்தார். சரவணமுத்துவிடம் மிக அன்போடு பேசிப்பழகினார். அவன் உடலுறுதிக்கு மருந்தும் கொடுத்தார். அவர் சொன்னபடியெல்லாம் கேட்டு நடந்தான் அவனும்.

ஊர்மக்களின் முறையீடு தோற்றது. கிழவர் சிதம்பரய்யருக்கே கர்ணம் வேலைகாயமாயிற்று. இங்கும் ஆரியபூதத்தின் தலையீடுதான் காரணம்! பெருங்குடிமக்களின் சிறிய ஆசையும் நிறைவேறாது மண்ணிலுள் புதைந்தது!

ஊரில்பலர் சரவணமுத்துவைக்கிண்டலும், கேலியும் செய்யத் தொடங்கினர். சிதம்பரய்யரும் சினந்து பேசத் தொடங்கினார். அவனது புத்தி தடுமாறிற்று. நினைவு மாறத்தொடங்கியது. மனம்போன போக்கில் பிதற்றத்தொடங்கினான். பின்பு பைத்தியத்தின் குறிகள் தோன்றி, முழுப்பைத்தியமாகவே மாறிவிட்டான்!

"சர்க்கார் உத்தியோகம், நான் கல் நெஞ்சனல்ல, கர்ணம் வேலை, பாமாவின் பரிதாபம், சீறிவிழுந்த சிதம்பரய்யர், கோயம்புத்தூர் டாக்டர் நல்லவராமே! நாங்கள் சினிமாவுக்குப்போனோம். பாமா அழமாட்டாளா?

(11-பக்கம் பார்க்க)

# ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதம்!

வீனஸ்.

2

## லிவியாவின் லீலைகள்

அழகு ஒரு ஆபத்தான ஆயுதம்! ஆனால், பெண்களுக்குச்சரியான சமத்துவமும் சுதந்திரமும், பண்பும், வசதியும் கிடைக்கும்வரை, அவர்கள் இந்த ஒரே ஆயுதத்தை உபயோகித்தே தீரவேண்டியவராகிறார்கள். இந்த நிர்ப்பந்தம் நீங்கியபிறகுதான், அழகு, ஆயுதமாகவோ, ஆபத்தாகவோ இராமல், இன்பக்காட்சியாக, இருதய கீதமாக, இருக்கமுடியும். போர்வீரன் தனது வாளின் கூர்மையாலும் அதைவிடக்கூர்மையான தனது திறமையாலும் எங்ஙனம், பலருடைய இருதயங்களைக்குத்திக்கொன்று, பின்னர் தனது கீர்த்தியை நிலைநாட்டுகிறானோ, அங்ஙனம் கீர்த்தியை நிலைநாட்டியபிறகு எங்ஙனம் உலகம் அவனைப்போற்றியும் புகழ்ந்தும், அவன் ஆணைக்கு அடங்கியும், அன்புக்கு ஏங்கியும் கிடக்கிறதோ, அதுபோல், ரோம் சாம்ராஜ்யத்துரமணிகள், தங்கள் அழகை ஆயுதமாகக்கொண்டு, வீரரை, ராஜதந்திரிகளை, இளவரசரை, மன்னரைத்தாக்கி, பலரை வீழ்த்தி, ஒருவரைத்தழுவி, கீர்த்தியும் கித்தாப்பும், தம்மைவந்து தழுவும்படி செய்து, சாம்ராஜ்யத்தை ஆட்டிப்படைத்தனர். செங்கோல், அவர்களின்சிறுவிரலே! பட்டாளங்கள், அவர்களின் பாய்ச்சிகை! படைத்தலைவர்கள், அவர்களின் பதுமைகள்! அவ்வளவு செல்வாக்குப்பெற்றனர், தமது சிங்காரத்தை ஆயுதமாகக் கொண்டு, அந்த அணங்குகள் ஆடவருடன் அந்நாளில் போர்புரிந்தபோது. அந்நாளென்ன! இந்நாளில்மட்டுமென்ன? "வேல்விழியால் எந்தன் விலாப்புறத்தைக் கொத்தாதே" என்கிறார் கவிபாரதிதாசன்!

போர்வீரனின் வாள் வீச்சினால் தலை உருள, முண்டம் கீழே வீழ்வதுபோல், அந்தக்காமவல்லிகளின் கணைகள், எவ்வளவோ பேரின் கதியைக்கீழே சாய்த்ததுண்டு, மதியை மாய்த்ததுண்டு, சதிகளுக்குச் செவிலித்தாயானதுண்டு, புரட்சிகளை மூட்டியதுண்டு.

அத்தகைய காலத்தில், வாழ்ந்த **லிவியா** எனும் ராணியின் ரசமான வரலாறு இது. லிவியாவின் வாழ்க்கை இரண்டு பகுதிகள் கொண்டது. முதல் பகுதியே இப்போது தீட்டப்படுவது. இரண்டாம்பகுதியில் லிவியா, ரோம் சாம்ராஜ்யத்தைத் தனது உள்ளங்கையில் வைத்துக்கொண்டது போன்ற அளவு அதிகாரம் பெற்றாள். அது பிறகு எழுதுவோம்.

லிவியா, கண்கவரும் வனப்புள்ளவள் என்று கூறத்தேவையில்லை. அழகில்லா அணங்கு, புகழில்லா ஆடவன், கற்பனைத்திறமில்லாத கவி, காதகத்துக்கு அஞ்சும் ராஜதந்திரி, போகத்தில் புரளாத பிரதானியர், பொய்யுரைக்கத்தெரியாத சேடிகள், ஆகியோருக்கு ரோம் சாம்ராஜ்ய சபாமண்டபங்களிலே இடமே கிடையாது. லிவியா, முகிலைக்கிழித்துவெளிக்கிளம்பிய முழுமதிபோல், துன்பத்தைத் துளைத்துக்கொண்டு வெளிவந்து இன்ப உலகில் இடம் பெற்றவள். அழகு, அறிவு, அந்தஸ்த்து, அலங்காரம், அபிநயம், அடங்காத ஆசை, இவைகளின் கூட்டுச்சரக்கு லிவியா. வானவில்லில், பலவகை வர்ணங்கள் இருந்து வனப்புடன் விளங்குவதுபோல், லிவியாவிடம் பலப்பல குணங்கள் உண்டு. லிவியாவுக்கு வினயமும் தெரியும் வீறிட்டெழவுந்தெரியும், கல்வி மிக்கவள், கவர்ச்சி ஊற்று; லிவியாவினிடம் பாசாங்கும் உண்டு, பிரதாபமும் உண்டு. இத்தகைய விசேட விருதுகளைத்தாங்கிக்கொண்டு உலவினதால், லிவியா, ரோம் சாம்ராஜ்ய சக்கிரவர்த்தியான **அகஸ்டஸ்** எனும் ஆணழகனின் பிரேமாவதியானாள்.

அகஸ்டஸ், அதிகாரத்தில் மட்டுமல்ல அரசன். அழகிலும், அரிய போர்த்திறத்திலும், ரோம் நாட்டு வாலிபர் உலகிலும் அவனே அரசோச்சினான். ஆஜானபாகுவான அவனது தோள்வலிமை பற்றி, தோழியர் உரைக்கக்கேட்டு, தூக்கத்தை மறந்த தோகையர் பலர். சுருண்டு வளர்ந்த கேசம், பரந்து விளங்கி, மேயும் குணம்படைத்த கண்கள், அவைகளிலே விண்மீன்களுக்குள்ள ஜொலிப்பு. இவற்றுடன் அகஸ்டஸ் உள்ளப்பண்பும் கொண்டவன். அவனே லிவியாவுக்கு ஏற்றவன் என்று கூறாதாரிலர்.

அகஸ்டசின் அல்லியாக, லிவியா அமைந்தது, பிறகு. முதலிலே லிவியா, மாலையிட்டது, மன்னனையல்ல; வேறோர் மதிப்பு வாய்ந்த சீமானை.

லிவியாவைப் போன்றே பெருங்குடியிற் பிறந்து பெருந்தன்மை வாய்ந்தவனாக விளங்கிய **டைபீரியஸ் கிளாடியஸ் நீரோ** என்பவனை, லிவியா மணஞ்செய்துகொண்டு வாழ்ந்துவந்தாள். அவளது அழகுபற்றி, மாளிகைகளிலும் மலர்ச் சோலைகளிலும் பேசப்பட்டு வந்ததென்ற போதிலும், அகஸ்டசின் காதுகளுக்கும் கண்களுக்கும் வேறுவேலைகள் இருந்தன்வாகையால், லிவியா, டைபீரியஸ் நீரோவுடனே காலந்தள்ளி வந்தாள். மிகமிக உயர்ந்தஸ்தானம் பெறவேண்டும் என்று பேராசை கொண்ட லிவியா, சாதாரணச் சீமானிடம் சிறைப்பட்டதாகக் கருதிக்கொண்டு, விடுதலைதினம் விரைவில் வருமென்றே காத்துக் கொண்டிருந்தாள். கணவனிடம், அன்புடனேயே நடந்துகொண்டாள். அவனது கஷ்டநஷ்டங்களில் பங்கும் கொண்டாள். ஆனால், மேல்வேலைக்குப் போகும்வரை, இருக்கும் உத்தியோகத்தில், கடமை தவறாது இருக்கும் அதிகாரி போல், லிவியா நடந்து கொண்டாள் என்றே கூறுவோம்.

அந்தப்புறத்துச் செய்திகிடக்கட்டும். அரசியலைக் கவனிப்போம். ரோம்ரணகளமாகிக்கிடந்தகாலம். ஜூலியஸ் சீசரின் மரணத்துக்குப்பிறகு, ரோம் நாட்டுத்தலைவர்களாக, அந்தோனியும் ஆக்டேவியஸ் என்ற குடிப்பெயரும், அகஸ்டஸ் என்ற பட்டப்பெயரும் கொண்டவனும், லெபிடஸ், என்பானுமாக, மும்மூர்த்திகள் கிளம்பினர். இவர்களின்கூட்டாட்சியின்போது, நடந்த கொலைகள், சித்திரவதைகள், சொல்லுந்தரத்ததன்று. புகழ் வாய்ந்த பிரசங்கி, **சிசிரோ**வின் தலை வெட்டப்பட்டகாலம். யார் தலைக்கு எந்த விநாடியிலே ஆபத்து வருமோ என்று, தலைபடைத்தோர் யாவரும் எண்ணித் தத்தளித்துக்கொண்டிருந்த பயங்கரமான நாட்கள்.

இத்தகைய கோரத்துக்குப்பிறகு, லெபிடசின் சீட்டு கிழிக்கப்பட்டது. இருவரே இருந்தனர், போட்டிக்கு. அகஸ்டஸ், ரோமில் அரசோச்சிவந்தான். அந்தோனி, ஈஜிப்ட்நாட்டில், கட்டழகி **கிளியோபாட்ரா**வின் காலடியில் வீழ்ந்துகிடந்தான். ரோமில், அகஸ்டசுக்கும் அந்தோனியின் மனைவிக்கும் விரோதம் மூண்டது. ஊர் இரண்டுபட்டது. அகஸ்டசின் கரம் வலுத்தது, அந்தோனியின் ஆட்கள், மனைவியுள்பட ரோம் நகரைவிட்டே ஓடிவிட்டனர். 8ம் பக்கம் பார்க்க

“ கஞ்சி நிதி லிமிடெட் ”

காஞ்சீபுரம்.

மேற்படி பாங்கியில், ரூபா 1000/, 500/, 250/, 100/, 50/- ஆகிய தொகைகளில் ஏலச்சீட்டுகள் பிரதிமாதமும் நடந்துவருகின்றன. சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர் விபரங்களுக்கு நேரிலோ அல்லது கடித மூலமோ எழுதித் தெரிந்து கொள்ளவும்.

K. R. சாரி, B. A.
செகிரிட்டரி.

# திராவிடநாடு

ஞாயிறு] 29—3—42 [காஞ்சி.

## ஆளுக்கொரு துப்பாக்கி!

“மேன்மைதங்கிய வைசிராய் அவர்களே! நாட்டுப் பாதுகாப்புக்காக, நாங்கள் கஷ்ட நஷ்டமேற்கத் தயார். திராவிடர்கள் சாவுக்கஞ்சாதவர்கள், அவர்களிடம் ஆயுதங்கள் கொடுத்து, உள்நாட்டுச் கொந்தளிப்போ, வெளிநாட்டினரின் படையெடுப்போ நேரிட்டால் சமாளிக்கும் பொறுப்பைத் தாருங்கள். வீட்டிற்கொரு ஆள் கிளம்பத்தயார்! ஆனால் ஆளுக்கொரு துப்பாக்கி தேவை” என்று கடந்தவாரத்தில் சென்னையில் கூடிய ஜஸ்டிஸ் வாலிபர் மாநாட்டில் பேசப்பட்டது. உணர்ச்சியின் வேகமட்டுமல்ல, அந்த உரைக்குக் காரணம். வீட்டிற்கொரு ஆள்தேவை என்று சர்க்காரும், நாட்டுப் பற்றுக்கொண்டோரென்ற நல்விளம்பரம் பெற்றோரும் பேசுகின்றனர், ஆனால் ஆயுதமற்ற ‘ஆட்கள்’ காகிதச் சிப்பாய்கள்தானே! ஆகவேதான், அத்தகைய முயற்சி பயன்தரவேண்டுமானால், ஆயுதமளிக்க வேண்டும் என்று வாலிபர் மாநாட்டில் கூறப்பட்டது.

வீட்டிற்கொரு இராம இலட்சுமணர்கள் (சீதையின்றி என்றுநாம் கருதுகிறோம்!) கிளம்பவேண்டும் என்று ஆச்சாரியார் கூறுகிறார். வில்லும் அம்புறாத் தூணியுமில்லாமல் கிளம்பிப் பயன் என்ன?

இதுபற்றி, **மெயில்** பத்திரிகை யோசனை கூறுகையில், துப்பாக்கி முதலிய ஆயுதங்களைத்தர வசதியுமில்லாது போயினும், இந்த நாட்டுக்காரருக்கு அரிவாள் கொடுத்துதவி, அதை உபயோகிக்கும் படையாகச்செய்யலாம் என்று எழுதிற்று. ஆகாயவிமானங்கள் ஆயிரமாயிரமடி உயரத்தில்பறந்து போர்நடத்தும் 1942ல் அரிவாள் படையேனும் இங்கு இருக்கட்டும் என்று இந்த ஆங்கில ஏடுகூற முன்வந்ததுகாண மகிழ்கிறோம்.

ஆயுதமில்லாததால் இந்த அரிவாள் படைதிரட்டும் யோசனையை மெயில் கூறியிருக்கலாம், ஆனால் அரசாங்கத்தினருக்கு யோசனை வேறு விதமாகக் காணப்படுகிறது.

ராஜாங்க சபையில் இதுபற்றிய விவாதம் நடந்தபோது, ஆயுதங்களை மக்களுக்களிக்கும் ஏற்பாடு நடைபெற்றால், காலிகளிடம் ஆயுதம் சிக்கிக்கொள்ளும், காலிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு, ஆயுதங்களைத் தாங்கள் பெற்றுவிடுவார்கள் என்று சர்க்கார் சார்பாகப் பேசப்பட்டது. ஆயுதந்தர மறுப்பதற்கு இஃதோர் காரணம்.

பிறிதொன்றும் கூறுவர் அரசாங்கத்தார். வகுப்புக்கலகங்கள் நேரிடுமாயின், அச்சமயத்தில் மக்களிடம் ஆயுதமும் இருந்தால், நிலைமை மோசமாகிவிடக் கூடும் என்பர்.

இரண்டும் ஒரு விதத்தில் உண்மையே. ஆனால் இருவிதமான சங்கடங்களும் நேரிடாதவகையில் போர் ஆதரவாளர்களைக் கொண்ட உள்நாட்டுப் படைகளை ஆங்காங்கேதிரட்டி, ஆயுதப் பயிற்சியைக் கூடுமான மட்டும் அளித்து, ஆயுதங்களை, ஒவ்வோர் ஊருக்கும் ஒரு ராணுவ அதிகாரியை நியமித்து அவர் வசம் ஒப்புவித்து, போர் நெருக்கடி, எதிர்பாராத விதமாக முற்றுமேயானால், அந்தச்சமயத்தில், பயிற்சிபெற்றவர்களிடம் கொடுத்து, துணைக்குக் கொஞ்சம் அளவுள்ள ராணுவத்தினரையும் உடனிருக்கச்செய்யலாம்.

பிரிட்டனில், உள்நாட்டுப் பாதுகாப்புப் படை, மிகச் சாதாரணமான முறையிலே முதலில் துவக்கப்பட்டது. இப்போது ராணுவத்தினரும் புகழத்தக்க முறையிலே, அந்த உள்நாட்டுப் படை, பலமும் பயிற்சியும் பெற்றுவிட்டது.

திராவிட நாட்டைப் பொறுத்தவரையில், வகுப்புக் கலகங்கள் எழக்காரணமே இல்லை. இந்தப்பகுதிக்குத்தான் முதலில் நெருக்கடி ஏற்படக்கூடுமென்றும், இலங்கைத் தீவுமீது எதிரியின் நாட்டமிருப்பதாகவும், அங்கு எதிரி வெற்றிபெற்று விட்டால் தென்னாட்டின் மீது தாக்குதல் நடத்துவர் என்றும் சில ராணுவநிபுணர்கள் கூறுகின்றனர். இந்நிலையில், இந்தப்பகுதிக்கேனும், சர்க்கார், ஆயுதங்கொண்ட உள்நாட்டுப்பொது மக்கள் படையை நிறுவுவது மிகமிகப் பயன்தருமென்று நாம் திடமாக நம்புகிறோம்.

போர் மூண்டதும், காங்கிரசார், போர் ஆதரவு காட்ட முடியாதென்று புகன்றபோதே. சர்க்கார் போரை ஆதரிக்கும் கட்சிகளிடம், போர் ஆதரவு பிரசாரப் பட்டாளத்தைப் பெருக்கும்பணி, பணந்திரட்டும் வேலை, உள்நாட்டுப் படைகள் அமைப்பது ஆகியவற்றை ஒப்படைத்து, உடனிருந்து உதவியிருந்தால் இன்று நாட்டின் நிலைமையே வேறுவிதமாக இருந்திருக்கும். தோழர் M. N. ராய், சிலமாதங்களுக்கு முன்பே, ஆங்காங்கு உள்நாட்டுப்பாதுகாப்புப் படைகளை சர்க்கார் ஏற்படுத்த வேண்டும் என்று எடுத்துக் கூறினார். அவரது கருத்துக்களை ஒலிபரப்ப பத்திரிகைள் கிடையாது. ஒலிப்பரப்பப்படாத கருத்துக்கள் சர்க்கார் செவியில் புகுவதுமில்லை! எனவே அந்தயோசனை கவனிப்பாரற்றுப்போய் விட்டது,

அரசியல் பிரச்சினையைத் தீர்க்க வந்திருக்கும் சர். கிரிப்சின் முயற்சி, எங்ஙனமாயினும், இந்தயோசனையை, நாட்டுத்தலைவர்களனைவரும், சர். கிரிப்சுக்குக் கூறி, விரைவில் ஆவனசெய்யின், நாட்டுக்கு ஈடில்லாத பணியாற்றினவராவர். அந்தமான் வீழ்ந்தது என்றதும், “ஐயோ! இனி என்னசெய்வது! அங்கிருந்து நமது நாட்டைத்தாக்க எதிரிக்கு முடியுமே” என்று திகில்படும் மக்களுக்கு, ‘ஆளுக்கொரு துப்பாக்கி’ இருக்கிறது என்றால், எவ்வளவோநம்பிக்கையும் ஆறுதலும் உண்டாகுமன்றோ!

## அந்தோ நெஞ்சு வேகிறது!

நமது பேரன்பர், தமிழர் தளபதி குடந்தைத் தோழர் K. K. நீலமேகம் அவர்களின் துணைவியார் தோழியர் தனபாக்கியத்தம்மாள், திடீரென மறைவுற்றது கேட்க, நெஞ்சு வேகிறது. தோழர் நீலமேகம் எவ்வளவு மனமுடைந்திருப்பார் என்பதை நாம் எண்ணிப் பார்க்கும்போது, எரிகிற எண்ணெயில் வீழ்

வதுபோல், நமது நெஞ்சு வேகிறது. இயக்கப் பணியாற்றிவரும் அவருக்கு, அவரது துணைவியார், மிக்க உதவியாக இருந்துவந்ததை நாம் அறிவோம். அவரது இல்லத்தில் சென்று தங்கி, உபசாரத்தை நேரில் கண்டவர், இச்செய்தி கேட்டுக் கலங்குவார், பெரியாருக்கு ஒரு நாகம்மையார் கிடைத்து, மறைந்தார், அன்று அவரது வாழ்க்கையிலே ஏற்பட்ட பள்ளம், காலத்தாலும் மூடப்படவில்லை. அதுபோல் தோழர் K. K. நீலமேகத்துக்குற்ற துணைவியாக இருந்துவந்த அம்மையாரின் பிரிவு, அவருக்கு, ஆறுதல் அளிக்க முடியாத அளவு கலக்கத்தை உண்டாக்கிவிட்டிருக்குமென்பதை நாமறிவோம். நாம் வேதாந்தியல்ல மாயாவாதம்புரிந்து அவரைத்தேற்ற, மதஉபதேசியல்ல, மறு பிறப்பு பற்றிப்பேசி அவருக்கு மன ஆறுதல்தர, நாம் கருதினாலும் அவர் அதனை ஏற்கார். அவர் ஓர் சுயமரியாதைக்காரர்.

ஆம்! ஆகவேதான், அவர் இந்தச் 'சோதனை'யிலிருந்து தப்பி, தத்தளித்துத்தேறி, கொந்தளித்துக் குளிர்ந்து, கதறிஓய்ந்து, பின்னர், அஞ்சோம் எதற்கும்' என்று உறுதிகொள்வார் என்று நம்புகிறோம். அவரது வாழ்க்கைக் கப்பலின் எதிரிலே, பெரும்பாறை தட்டுப்பட்டுவிட்டது. அதனைக்கடந்து, மரக்கலத்தைத் தோழர் கொண்டு செல்வார் என்று நம்புகிறோம்.

இத்தாலிய விடுதலை வீரர், காரிபால்டி, தனது, பிரிய மனைவி இறந்தபோது, "ஆம்! என்மனைவி இறந்தார், ஆனால் என்மனைவிமீது நான் கொண்ட அன்பு அணையாது. அந்தஒளி இன்னமும் இருக்கும், அதைத் துணைகொள்வேன், இத்தாலிய விடுதலைப் போரில் மேலும் ஈடுபடுவேன்" என்றுரைத்தாராம். போரிட்டார், வெற்றிகண்டார். தோழர் நீலமேகமும் அத்தகைய இயல்பு படைத்தவரே, இந்தநேரத்தில் அவருக்கும், அவரது மக்களுக்கும் நாம் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## புன் சிரிப்பு!

**வாதி:** சொத்து என்னுடையது. முழுப்பொறுப்பும் என்னிடமே தந்துவிட வேண்டும்.

**பிரதிவாதி:** சொத்திலே எனக்குப்பாகம் உண்டு. அதைப்பிரித்துத்தந்துவிட வேண்டும். சொத்து நிர்வாகத்தை வாதியிடமே கொடுத்துவிட்டால், எனது பாகம் கிடைக்கமுடியாதபடி சூது நடத்தப்படும்.

**நீதிபதி:** பிரதிவாதிக்கு, சொத்திலே பங்கு உண்டு என்பதை வாதி ஒப்புக்கொள்கிறாரா?

**வாதி:** பங்குஉண்டு. ஆனால் சொத்தைப் பிரிப்பானேன்! இருவரும் சேர்ந்து அனுபவிப்போம்.

**பிரதிவாதி:** வேண்டாம்! வேண்டாம்! அவர் டாம்பீகச் செலவாளியாகவும், நான் உழைப்பாளியாகவும், அவர் அதிகாரஞ் செலுத்தவும் நான் அடங்கி ஒடுங்கி இருக்கவும் நேரிடும்.

**வாதி:** அந்தப்பயம் வேண்டாம், நான் மிக நல்லவன். நானூறு நற்சாட்சிப்பத்திரங்கள் உள்ளன பாருங்கள்.

**கோர்ட்டார்:** சரி! இருவருக்கும் பங்கு உண்டு. பிரிதிவாதி பிரிவினை கோருகிறார். சொத்துச் சீரழியும் என்று வாதி அஞ்சுகிறார். சொத்து, வாதியின் ஏகபோக அனுபோகமாகுமென்று பிரதிவாதி பயப்படுகிறார். இங்கிலையில், பிரித்துவிடுவதுதான் முறை. ஆனால், இப்போது சொத்தின்மீது கடன் இருக்கிறது. அதைத்தீர்த்து, சொத்தைமீட்டுக்கொள்ளவேண்டும். அதற்காக, இருவரும் சேர்ந்து இன்னின்ன விதத்திலே ஒத்துழைத்து, சொத்தை மீட்டுக்கொள்ளட்டும். பிறகு பிரித்துக்கொடுக்க நான் இசைகிறேன். இடையே அவர்கள் பிரிவினை வேண்டாமென்று தீர்மானித்துவிட்டாலும் எனக்குச் சம்மதமே.

பிரதிவாதிக்குப் புன்சிரிப்பு! வாதிக்கு வாட்டம்!

வஞ்சனையாக, சொத்து நிர்வாகமுழுவதையும் தான் பெற்றுக்கொண்டு, பிரதிவாதிக்கு பட்டை நாமமிட வாதிகருதியது ஈடேறவில்லை. நியாயத்தைக் காட்டிக்கேட்போம், நடப்பது நடக்கட்டும், ஒருகை பார்த்தே விடுவோம் என்பது பிரதிவாதியின் எண்ணம். வஞ்சனைக்கு இடங்கிடைக்கவில்லையே என்று வாதிவாட, நீதிக்கு இடமிருக்கிறது என்ற நம்பிக்கையால், பிரதிவாதி மகிழ, கோர்ட் கலைந்தது.

வாதி காங்கிரஸ்! பிரதிவாதி முஸ்லீம்லீக்! சொத்து, இந்திய நிர்வாகம், கோர்ட், டில்லிமாளிகை, நீதிபதி சர். கிரிப்ஸ்!

முதலில் காங்கிரஸ் தலைவர் மௌலானா அபுல்கலாம் அஜாது, சர். கிரிப்சைக்கண்டு பேசிவிட்டு வந்தார், முகத்திலே உற்சாகமே காணப்படவில்லை, என்றும், பிறகு, முஸ்லீம்லீக் தலைவர், ஜனாப் ஜின்னா, சென்று பேசிவிட்டு வந்தார், அவர்முகத்திலே புன்னகை ஜொலித்தது என்றும், பத்திரிகைகளில் வெளிவரக்கண்டோம், மேலே கூறிய, வழக்குரைக் காதை நினைவிற்கு வந்தது. நடந்தது அதுதானா? நாள் சில செல்லின், விளக்கமாகத் தெரிந்துவிடும்.

சொத்தை, சொந்தக்காரிடம் தருவதுபோல், நாட்டுக்கு ஏற்ற எதிர்கால அரசியல் திட்டம் வகுப்பதென்றால், நமது பங்கு இதுவெனக் குறித்து தனியாக்கிக்கொடுத்து விடுங்கள். 4மாகாணங்கள் எம்முடையது-என்று முஸ்லீம்லீக் கேட்கிறது. ஆனால் சொத்தின் மீது கடன்இருப்பதுபோல், நாட்டின் தம்மீது ஆபத்து இருப்பதால், எதிர்கால அரசியல் நிர்ணயம்பற்றிப் பிறகு யோசிப்போம், முதலிலே, சொத்தைக் கடன் காரரிடமிருந்து மீட்பது போல், எதிரியை விரட்டும் வேலையில் ஈடுபடுவோம், அதற்காக, வழக்கை ஒத்திவைத்துவிட்டேனும், ஒன்றுபட்டு வேலைசெய்வோம் என்றும் கூறுகிறது. கிரிப்ஸ் கோர்ட்டின் தீர்ப்பு, நாம் மேலே கூறியுள்ளபடி இருப்பின், சொத்துக்கும் சேதமில்லை, நீதிக்கும் நடுக்கமேற்படாது. பார்ப்போம் பொறுத்திருந்து, பிரபலபாரிஸ்டர், நீதிபதிஸ்தானத்திலமர்ந்திருக்கிறார், அவர் வாதிடுகிறாரா, நீதியைத்தீட்டுகிறாரா என்பதை!

## 'ரஷியா' உதயம்!

சின்னக் காஞ்சிபுரம், பார்ப்பனரல்லாதார் கழகத்தலைவர் தோழர் T. P. S. பொன்னப்பனுருக்கு
21—3—42-ல், ஒரு பெண்
குழந்தை பிறந்தது.
குழந்தைக்கு
**ரஷியா**
என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

---

**(ரோம்)** 8ம் பக்கத் தொடர்ச்சி.

அகஸ்டசின் அழகு ஈடில்லாதது, அதிகாரம் இணையற்றது, அன்பு குறைவற்றது. லிவியா, அகஸ்டசின் மனைவியாகச் சம்மதித்தாள். அகஸ்டஸ் லிவியாவின் கணவனையே கூப்பிட்டு, "உன்மனைவியை நான் மணம்புரிந்துகொள்ள வேண்டும். அவளன்றி நான் வாழேன். எனக்கு உயிர்பிச்சைதர" என்று வினயமாகக் கெஞ்சினனோ, அன்றி மிரட்டினனோ தெரியாது, எப்படியோ, அகஸ்டஸ், லிவியாவின் புருடனின் சம்மதத்தைப் பெற்றான். திருமணப்பந்தலுக்கு, லிவியாவை அழைத்துவந்து அகஸ்டசின் கரத்தில், டைபீரியஸ் நீரோவே ஒப்புவித்தான். மணவிருந்தில் மகிழ்ந்து கலந்துகொண்டான். தனது மாஜி மனைவி பட்டமகிஷியாவது பற்றி அவன் பெருமையும் பூரிப்பும் கொண்டவன் போலவே காணப்பட்டான். இந்த ரசத்தை என்ன பெயரிடுவது! ரோமில் தவிர வேறு எங்கே காண்பது!

உ

# "கந்த விலாஸ்"

## அ. கந்தசாமி முதலியார் & சன்ஸ்.,

ஜவுளி வியாபாரம், ஆடிசன்பேட்டை. காஞ்சீபுரம்.

கிளை ஆபீஸ்கள்:—

கடைவீதி
சேலம் டவுன்.



சுவாமி தேருக்கு எதிரில்
கீழரதவீதி
திருநெல்வேலி.

காஞ்சீபுரம், சேலம், எங்கள் சொந்தக் கைத்தறியில் நவீன நாகரீகத்திற் கேற்றவாறு தயாரிக்கப்பட்ட பட்டு & ஜவுளி சேலைகளும், பட்டு & நூல் ஜரிகை துணிகளும், பனாரஸ், கராச்சி, கொள்ளேகாலம், பெங்களூர், மதுரை, கோயமுத்தூர், புல்லம்பேட்டை, புதட்டூர் முதலிய ஊர்களில் தயாராகும் சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், மில்லில் தயாரிக்கப்பட்ட கோட்டிங், ஷர்ட்டிங், சீட்டி, வாயில் துணி முதலான எல்லாவித ஜவுளிகளும் விலை சகாயமாயும், சரக்கு நயமாயும், சாயம் உத்திரவாதமாயும் எங்களிடம் கிடைக்கும். ஒரு முறை வாங்கி உடுத்தி பார்க்க வேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**கந்தவிலாஸ் :: A. K. & SONS.,**

## ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதம்!

5ம் பக்கத் தொடர்ச்சி.

இந்தக்கொந்தளிப்பும் இயல்பாக உண்டானதல்ல. இங்கும் லீலாவிநோதத்தின் சேட்டைதான்.

அந்தோனி, கிளியோ பாட்ராவினிடம் காமுற்றுக் கருத்திழந்து கிடந்தபோது அவனது மனைவி, **புல்வியா** என்பவள், ரோம் நாட்டில் புலம்பிக்கொண்டு கிடந்தாள். ஈஜிப்ட்நாட்டு ராணியின் புகழ், புல்வியாவின் செவியைத்துளைத்து, சிந்தனையைக் குழப்பிவிட்டது. கணவன்மேல் கடுங்கோபங்கொண்டாள். பழி வாங்கத்துடித்தாள். அதற்கோர் பாதகத்திட்டமும் கண்டாள்!

என்னை மறந்து வேறு மங்கையுடன் கூடிக்குலவிடும் என்கணவன்மீது பழிதீர்த்துக்கொள்ள, நானோர் கள்ளபுருடனைத் தேடியடைவேன், அவனுடன் காலந்தள்ளுவேன். அதுகேட்டு அந்தோனியின் மனம் வேகட்டும், மதிமருளட்டும், கதி கெடட்டும் என்று தீர்மானித்தாள் **புல் வியா.** தூதுவிட்டாள் அகஸ்டசுக்கு!

அகஸ்டஸ், புல்வியாவின் மகளின் கணவன்! புல்வியாவின் முதல் புருடனுக்குப் பிறந்த பெண்ணைத்தான் அகஸ்டஸ் மணந்து கொண்டான். மாமி விட்ட தூதுகேட்டு வயிறு வெடிக்கச் சிரித்த மருகன், அவளைக் காரித்துப்பினான்! மகளும் வேண்டாமென்று மறுத்துவிட்டு, வேறோர் மங்கையை மணந்து கொண்டான். புல்வியாவின் தாபத்தைப்பற்றியும், அகஸ்டஸ் அவளை அலட்சியம் செய்தது பற்றியும் ஊரிலே கேலியும் கிண்டலும் அமோகமாயிற்று. புல்வியா தனது படைதிரட்டிக்கொண்டு, அகஸ்டசை எதிர்த்து ஒழித்துவிட முனைந்தாள். ஆனால் அவளுடைய கட்சி பலங்குன்றிக்கிடந்தது. அவளும், அவளைச் சார்ந்தோரும், ரோம் நகரை விட்டே ஓடிவிட நேர்ந்தது.

அதுசமயம், **லிவியாவும்** அவள் கணவனும், அகஸ்டசின், படைகளுக்குத்தப்பி சொல்லொணாக் கஷ்டங்கள் அனுபவித்து வேற்றூர் போய்ச் சேர்ந்தனர். அகஸ்டசின், கோபம், லிவியாவை, ரோம் பிரதேசத்தைவிட்டே ஓடச்செய்தது; பின்னர் அதே அகஸ்டசின்நேசம், அவளை ரோம்சாம்ராஜ்ய அரசியாக்கிற்று.

பொல்லாங்கு எண்ணிய புல்வியா, கணவனைக் காதைப்பிடித்திழுத்து வருவேன் என்று கூறிக்கொண்டு ரோம் நகரைவிட்டுச் சென்றவள், மீண்டும் ரோம் வரவில்லை, காலம் அவளைக் கல்லறைக்கு இழுத்துச் சென்றுவிட்டது.

அவள் இறந்ததும், அந்தோனி அகஸ்டஸ் பகைமையும் இறந்தது. இருவரும் கைகுலுக்கிக் கொண்டனர். கைகுலுக்குவதுடன் நிற்கவில்லை, அந்தோனி, அகஸ்டசின் தங்கை, ஆக்டேவியா என்பவளைக் கலியாணம் செய்துகொண்டான். சமரும் பெண்ணாலே, சாந்தமும் அவளாலே!!

இருதலைவர்கள் ஒன்று பட்டதை யொட்டி விமரிசையான விழா வொன்று நடத்தினான் அகஸ்டஸ். அகஸ்டசுக்கு அஞ்சி ஓடிப்போனவர்கள், திரும்பி ரோம் வந்தனர். லிவியா தம்பதிகளும் திரும்பிய திருக்கூட்டத்தினரே! விழாவிலும் விருந்திலும், லிவியாவுக்கு இடங்கிடைத்தது. அகஸ்டஸ், லிவியாவை, விருந்தில் கண்டான், அவளது அழகு, அவனை அடிமையாக்கிவிட்டது.

"உன்னைக்கண்டதும் குதூகலத்தால் நடனமாடும் இந்தக்கண்கள், அந்நாளில் உன்பெயரைக் கேட்டதும் எவ்வளவு மிரட்சி அடைந்தது என்பதை அறிவீரோ! மலர்க்கரமென நீர்புகழும் இந்த எனது கரங்களில், நீர் விலங்கிடவன்றோ முன்னம் தேடினீர். அன்று தூக்கு மேடைக்கு வாவென அழைத்தீர். இன்று மணப்பந்தலுக்கு அழைக்கிறீர். அன்று அதிகாரத்தின் ஆர்ப்பரிப்பு, இன்று அன்பின் பதைப்பு! அகஸ்டஸ்! காலம் எப்படி மாறிவிட்டதுபார்!" என்று லிவியா, லலிதமாகப்பேசி, அகஸ்டசின் உள்ளத்தில் மூண்ட காதற்தீயைத் தூண்டிவிட்டாள்.

(7-ம் பக்கம் பார்க்க)

# சூழல் விளக்கு

## 1. துரைராசரின் சீமை

புதுக்கோட்டை சமஸ்தானத்தில், மகிழ்ச்சிக்குரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை என்றதும், நமக்கு தோழர் முத்துசாமி வல்லத்தரசுவின் நினைவும், கான்பகதூர் கலிபுல்லாவின் கவனமும் வருதல் இயற்கை. அன்பர் கலிபுல்லா இது சமயம் அங்கு உதவி நிர்வாக அதிகாரியாக இருக்கிறார். நாம் அவரது சேவையைப் பெறுவதற்கில்லையே என்று ஏங்கியதுண்டு. ஆனால் எங்கே இருந்தாலென்ன, இதோ எனதுபணி, பெற்றுக்கொள்க என்று கூறும் இயல்பு படைத்தவர் அவர். தேர்தலிலே தோற்றுவிட்ட சர். R. K. சண்முகம், வெற்றி பெற்றிருந்தாலும் செய்திருக்கமுடியாத பெரிய பணியைக் கொச்சித் திவானாக இருந்து ஆற்றினாரல்லவா! அதுபோலவே நமது தலைவர்கள், எங்கிருப்பினும், நறுமணம் வீசாதிருக்காது.

கான்பகதூர் கலிபுல்லா அவர்கள் இருந்து பணியாற்றும் சமஸ்தானத்தில், அக்கிரகார ஏகபோக உரிமை உருவற்றுப்போகிறது. சென்றவாரம் வெளிவந்த சமஸ்தான தாக்கீதின்படி, இனி, சமஸ்தான உத்யோகங்கள் காலியாகுமானால், பார்ப்பனரல்லாதருக்கே முதல் சலுகை, பிறகே பார்ப்பனருக்கு. வேலைக்கு, பார்ப்பனரல்லாதாராக இருந்தால் (S. S. L. C.,) பத்தாவது தேறிஇருந்தால் போதும், ஆனால் அதே வேலைக்கு ஒரு பார்ப்பனர் நுழைய விரும்பினால், B. A., தேறி இருக்கவேண்டும். இந்த ஏற்பாட்டின்மூலம், எங்கும் பிரம்மமயமாக இருக்கும் கொடுமைகளையப்படும். பார்ப்பனரல்லாதாருக்குள்ளும், முதல் சலுகை, தாழ்த்தப்பட்டமக்களுக்கும் முஸ்லீம்களுக்குமே தரப்படும். இளைத்தமக்களை ஈடேற்றுவதே அன்பு படைத்த சர்க்காரின் கொள்கையாதல் வேண்டும். இங்நாட்டில், பார்ப்பனரல்லாத மக்களே சகல துறையிலும் முதல் இடம் பெறமுடியாது, ஏன், இடமேபெற முடியாமலும் தவிக்கின்றனர்! அத்தகைய மக்களுக்கு நீதி வழங்க புதுக்கோட்டை சமஸ்தானம் முன்வந்தது காண மகிழ்கிறோம், அதன் போக்கைப் பாராட்டுகிறோம். நீதிக்கட்சியின் இலட்சியங்கள், எங்கும், இங்ஙனம் வெற்றிபெறக் காணும்போது, இறும்பூதெய்துகிறோம். முன்னாள் புதுக்கோட்டை மன்னரின், தம்பியார், இளவரசு துரைராசசிங்கம், நீதிக்கட்சிக்காக பணிபல புரிந்தவர். அவர் வாழ்ந்த சீமையில், இன்று, அவர் போற்றிய இலட்சியங்கள் உருவாக வெளிவருவதற்கான அடிப்படைத் திட்டம் எழக்கண்டு, ஆனந்தமடைகிறோம். சபாஷ் புதுக்கோட்டை!

## 2. பொது உடைமைக்கு எல்லை!

அடிமேல் அடிவாங்கிக்கொண்டு அவதிப்படும் அடால்ப் ஹிட்லர், இம்முறை பேசுகையில், ஆர்ப்பரிப்புக்காணோம், ஆனந்தங்கூட அதிகமில்லை. அது அதிசயமுமல்ல. ரஷிய களத்திலே கிடைக்கும் "கர்ண கடூரமான" செய்திகள், ஹிட்லரின் மனதைக்குழப்பி விட்டேயிருக்கும். அதிசயமான வேறோர் அம்சம் அவரது பேச்சிலேகாணப்பட்டது. அதன் பொருள் யாதோ அறியோம். "வசந்தகாலம் வரட்டும், வாட்டி வதைக்கிறேன் ரஷியாவை" என்று கூறினார் ஹிட்லர். இது அவர் சொல்லித்தீரவேண்டிய பேச்சு. ஆனால், மற்றொன்று சொன்னார், அதுதான் ஆச்சரியமாக இருந்தது. பொதுஉடைமையினால் விளையக்கூடிய ஆபத்தை ஐரோப்பா நன்றாக உணர்ந்துகொண்டு விட்டது. ஆகவே பொதுஉடைமையை அதன் எல்லைக்குள் இருக்குமாறு ஏற்பாடுகள் செய்வேன் என்று ஹிட்லர் கூறினார். பொதுஉடைமைக்கு, இவர் எந்த அளவுகோல் கொண்டு, எல்லை காண்பார்! பொதுஉடைமைக்காக ரஷியாவில் புரட்சிமூண்டு, பின்னர் பொதுஉடைமை அரசு ரஷியா பூராவுக்கும் ஏற்பட்டது. அந்த எல்லையை மாற்றவோ, குறைக்கவோ. ஹிட்லருக்கு என்ன அதிகாரம் உண்டு! மேலும், பொது உடைமைக்கு எல்லை எது என்பது, தெரியாமல் ஹிட்லர் திண்டாடுவதாகத் தெரிகிறது. பொதுஉடைமை, கடலைகடக்கும், மலைகளைத் தாண்டிவரும், அரசியல் வாதிகள் நிர்ணயிக்கும் பூகோளக்கோடுகளைப் பொசுக்கி முன்னேறும், அதன் எல்லை எது என்றால், ஆராய்வோர் உணர்வர். பசியும் பிணியும் அற்று, பாட்டாளியும் முதலாளியும் மோதும் கொடுமை மடிந்து, வேலையில்லாக்கோரம் மாண்டு, வியாபாரப்போட்டியை இலாபத்துக்குப் பயன்படுத்திக்கொண்டு மக்களின் வாழ்க்கையை வதைக்கும் வன்னெஞ்சம் வீழ்ச்சியுற்று, ஒருவர் உணவை மற்றொருவர் பறிக்கும் பாதகம் படுசூரணமாகி, எல்லாரும் இன்புற்று இருக்கும் இடம் எங்கு ஏற்படுகிறதோ அதுதான் பொது உடைமையின் எல்லை! இதைத்திட்டமிட்டு, கட்டுக்கு அடக்கி, எல்லையிட்டுவைக்க எண்ணாயிரம் ஹிட்லர்கள் எழும்பினாலும் முடியாது!" என்று சோவியத்தலைவர்கள் கூறுவர். ரஷியா பூராவையும் கசக்கிப்பிழிந்துவிடப்போகிறேன் என்று வீம்பு பேசிய ஹிட்லர், அந்தப் பேச்சை விட்டுவிட்டு, பொது உடைமையை அதன் எல்லைக்குள் இருக்கச்செய்வேன் என்று கூற முன்வந்தது விந்தையினும் விந்தையாகும்!

## 3. புதுப்பலம்

அஹ்ரார்களும், ஜமையத்-உல்-உலமாக்களும் லீக்கை எதிர்க்கின்றனர், எனவே லீக், முஸ்லீம்களின் ஏகப்பிரதிநிதி ஸ்தாபனமாகாது என்று காங்கிரசார் கூறுவது வழக்கம். தலைமைப்பதவிகள் தேவை என்பதற்காக, சில தனிப்பட்டமுஸ்லீம்களும், அரசியல் ஊஞ்சலாடும் அல்லாபக்ஷ்களும், லீகை எதிர்க்கலாம். ஆனால், அதன் இலட்சியங்களை எதிர்க்கமுடியாது. ஜமையத்உல்-உலமாக்கள் மாநாடு, மார்ச் 21-ந்தேதி இரவு லாகூரில் நடந்தது; அதில் நிறைவேறிய தீர்மானத்தில் ஒரு பகுதி, "மெஜாரடி வகுப்பினரின் தயவில் 9-கோடி முசல் மான்கள் வாழும்படியாக உள்ள சமஷ்டியோ, அல்லது மத்திய சர்க்காரையோ, ஜமையத் ஏற்காது" என்று இருக்கிறது. ஜனாப் ஜின்னா இதையேதான் கூறுகிறார். சர்க்காரின் சமஷ்டித்திட்டமும், காங்கிரஸ் கேட்கும் மத்திய சர்க்காரும், முசல்மான்களை, நிரந்தரமாக, இந்து ஆட்சியின்கீழ் இருக்கச்செய்யும், ஆகவே அத்தகைய திட்டம்கூடாது என்று ஜனாப் ஜின்னா கூறுகிறார். அவரை எதிர்ப்பதாகக் கூறும் ஜமையத், இதனை உணர்ந்தது, முஸ்லீம்களுக்குப் புதுப்பலம்தருவதாகவும், மேலும்ஜமையத், "மத, கலைஞான, ராஜீய விஷயங்களில் முசல்மான்களுக்குச் சுயநிர்ணய உரிமை இருக்கக்கூடிய மத்திய அரசியலே தேவை" என்றும் கூறுகிறது. அதற்குப் பெயர் தான் **பாகிஸ்தான்!** மேலும் சர். கிரிப்ஸ் அரசியல் பிரச்சினையைத் தீர்க்க வந்திருக்கும் இச்சமயத்தில் ஜமையத் இங்ஙனம் கூறினது மிக முக்கியமானதாகும்.

## 4. அவரது அலுவல்!

"22-3-42 மித்திரனில் கீழ்க்காணும் செய்தி இருக்கிறது. "நாளை மாலை 4-மணிக்கு லாகாலேஜிக்கு அருகேயுள்ள பொதுகக்கூசை கனம் புலுசு சாம்பமூர்த்தி திறந்துவைப்பார்!"

# குமஸ்தாவின் பெண்தான்!

அல்லது

## கொலைகாரியின் குறிப்புகள்.

[ சௌமியன். ]

3.

[முன்பு கள்ளநாயகனைக் கொன்றதற்காகத் தூக்குத் தண்டனை பெற்ற காந்தா் தன் டைரியில், ஒருநாள் நாடகம் பார்த்த நினைவும், அன்றைய மறுதினம் காலையில், எதிர்வீட்டில் ஒரு சுந்தர புருடனைக் கண்டதையும்எழுதி இருந்தாள். மேலும், அந்த டைரியில் காணப்பட்டதாவது.]

நெடுநாட்களுக்கு முன்பு கல்கத்தா சென்றிருந்த அலமு, தன் கணவனை இழந்துவிட்டு, ஒரேமகனுடன், ஊர் திரும்பி எங்கள் வீட்டுக்கு எதிர்வீட்டைவிலைக்கு வாங்கிக்கொண்டு, அதில் குடியேறினாள். அவள் வரப்போகிறாள் என்பது எனக்கு முன்னாடியே தெரியும். அவள் பிள்ளைக்குத் தலைசீவி சடைபோட்டு, பொட்டிட்டுப் பொழுது போக்கலாம் என்று நான் எண்ணியதுண்டு. ஆனால், அலமுவின் மகன் நான் எண்ணிக் கொண்டிருந்தபடி, சிறுஅம்பியல்ல! அலமுவின்பிள்ளை தான். நான் நாடகம் போய்வந்த மறுதினம் காலையில், என் கண்களுக்குக் காட்சி அளித்தது. நான் தொட்டு விளையாட முடியாத பருவம், என்கிட்டேவர முடியாத வயது. ஏறக்குறைய இருபது இருக்கும். என்கிட்டே அந்த சுந்தரரூபன் வரமுடியாது என்று கூறினேனல்லவா! அவன் என்னசெய்தான் தெரியுமோ! யாரது புதிதாக இருக்கிறதே என்று நான் பார்த்தேனோ இல்லையோ ஒரே தாவாகத்தாவி என் நெஞ்சில் புகுந்து கொண்டான். அந்த உருவம், எதிர்வீட்டு வாசற்படியண்டைதான் இருந்தது. ஆனால், என் நெஞ்சிலே சித்திரம் பதிந்துவிட்டது. சுந்தரமானஅவனது பெயர் சோமசுந்தரம்! அலமு அதிர்ஷ்டக்காரி என்று அடிக்கடி அம்மா என்னிடம் கூறுவதுண்டு, அலமுவுக்கு ஐசுவரியம் இருக்கிறது என்பதால். நான், நாக்கைத்தட்டுவது வழக்கம், ஐசுவரியம்இருக்கட்டுமே அவளிடம், அதனால் நமக்கென்னஎன்று கூறுவதுண்டு. ஆனால், இப்படிப்பட்ட மைந்தனை அலமு பெற்றிருப்பது எனக்கென்ன தெரியும்! அந்தச் செல்வத்தை நான் பெறவேண்டுமென்று, பார்த்ததும்எண்ணினேன். முன்னாளிரவு நான்கண்ட நாடகத்தால் பல எண்ணங்கள் என்மனதிலே உதித்தன. அதிலேமுக்கியமானது, கருத்துக்கிசைந்த மணாளனைப் பெறவேண்டும், என்பது தான். அதே எண்ணத்தை அணைத்துக்கொண்டு தான் முன்னாள் இரவு நான் தூங்கினேன். காலையிலே எழுந்ததும், என்கண்களில், சோமசுந்தரம் தென்பட்டால், எனக்கு எப்படி யிருக்கும், நீங்களே யோசியுங்கள். பசியோடு உலவும் ஒருவன் பட்சணக் கடையருகே வருகையில், கமகமவென வாசனை வீசினால், நாக்கில் நீர் ஊறாதா! நான் இதோ வெளிப்படையாகக் கூறுவதைப்போல, பல பெண்கள் கூறமாட்டார்கள், ஆனால் நான் மயங்கினதைப்போல மயங்காத பெண்கள் எத்தனைபேர் இருக்கமுடியும்! அந்த மரக்கட்டைகளைப் பற்றிப் பேசுவானேன்.

இவ்வளவையும் எண்ணிக்கொண்டு. நான் சோமசுந்தரத்தைப் பார்த்தபடி, நின்றுகொண்டே யிருந்தேன் என்று எண்ணுகிறீர்களா? அதுதான் இல்லை. ஒருமுறை பார்த்தேன்,. தலைகுனிந்து கொண்டே யோசித்தேன், யாராக இருக்கும் என்று. அலமுவின் மகனோ என்ற யோசனை தோன்றிற்று, மறுபடி ஒருமுறை பார்த்தேன், அதற்குள் அம்மா, சொன்னார்கள், "காந்தா! அவன்தான் அலமுவின் பிள்ளை" என்று. உடனே நான் வேறுவேலைகளைக் கவனிக்கச் சென்றுவிட்டேன்.

அலமுவும், எங்கள் அம்மாவும் பாலிய சினேகமாம். ஆகவே, அடிக்கடி அவர்கள் வீட்டுவிஷயங்களைப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்க ஆரம்பித்தது. முதலிலே அம்மாதான் ஏதாவது பேச ஆரம்பிப்பார்கள், அந்த சுவாரஸ்யமான பேச்சை நான் முடிக்க விடுவதில்லை, கேள்விமேல் கேள்வி போடுவேன், அது எப்படி, இதுஎப்படி என்று விசாரிப்பேன். இப்படிப் பேசிப்பேசி, சோமசுந்திரத்தைப் பற்றிய பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்.

சோமசுந்தரம்-பெயருக்கேற்ற ரூபவான். தங்கமான குணம், நல்லபடிப்பு, இளமை, இவ்வளவும் ஒருங்கே பொருந்தியவன். எவள் "கொடுத்து வைத்திருக்கிறாளோ" அவரது மனைவியாகி மகிழ்ச்சியோடு வாழ. கைக்கு எட்டாத கனியானாலும், நினைப்புக்கு எட்டாமற் போகுமா! அதுபோல் எனக்கு சோமுவின் மீது எண்ணம் விழுந்தது. இத்தகைய மணாளன் கிடைத்தால், மனமகிழ்ச்சியோடு வாழலாம். உலகில் எதற்குப் பிறந்தோம், சந்தோஷமாக வாழ்வதற்குத் தானே. ஆனால் சுந்தரம் என்னைக்கண்டு ஆசைப் பட்டாலும், என் வறுமையைக் கண்டால் பயப்படுவார். கதைகளிலே வருவதுபோல். அவருக்கு எப்படியோ என்மீது காதல் உண்டாகி, ஏழைப்பெண்ணாக இருந்தாலும் எனக்கு அவள்தான் வேண்டும் என்றுசொல்லி, என்னைக் கலியாணம் செய்துகொண்டால், எவ்வளவு இன்பமான வாழ்வு எனக்குக் கிடைக்கும். எனக்கு அந்த வாழ்வு கிடைத்தால், என் தங்கை சாந்தாவுக்கு எப்படிப்பட்ட மேலான இடத்திலே வரன் தேடுவேன் தெரியுமோ! எங்கள் வறுமை ஓடியேபோகும். வாட்டம் தீர்ந்துவிடும்-இத்தகைய எண்ணங்கள் என்மனதில் வளர்ந்து கொண்டே வந்தன. சோமுவைக் காணும்போதெல்லாம், இந்த எண்ணங்கள் அலைபோல் மனதில்மோதும். எப்படியோ நான், ஒரு இன்ப மாளிகையை என்மனதிலே கட்டிவிட்டேன்.

என் தங்கை சிறுபெண்ணானதையால், அடிக்கடி அலமு அத்தையிடம் போய்ப் பேசுவாள். தோட்டத்திற்குச் சென்று விதவிதமான மலர்களைக் கொண்டு வருவாள். அலமுவும், சாந்தாவிடம்அன்பாகஇருக்கவே, இந்தத்தொடர்பு அதிகரித்துக் கொண்டே வந்தது. ஒவ்வொருநாளும், சோமு, என்னைப்பற்றி ஏதாவது, சாந்தாவிடம் பேசாதிருப்பதில்லையாம். அதை அப்படியே, சாந்தா, வீட்டில் "பிளேட்" வைப்பாள். சாந்தா கூறுவதைக் கேட்கக்கேட்க எனக்குப் பிரமானந்தமாக இருக்கும். அப்பா பெருமூச்செறிவார். அம்மா "அகிலாண்டேஸ்வரியின் கிருபை எப்படியோ, யார்கண்டார்கள்" என்று உருக்கமாகச் சொல்வார்கள். சாந்தா, குறும்புப்பார்வையுடன் என்னை நோக்கிச் சிரிப்பாள். அவளுடைய கன்னத்தை நான், நோகாதபடி கிள்ளுவேன். இந்த ஆனந்தம் எங்கள் குடும்பக் கவலையைக்கூட ஒரு அளவுக்குக்குறைத்தது. பாம்பும் தேளும் நெளியும் குழியிலே விழுந்தவன், கைக்குக் கிடைத்த வேரைப்பிடித்துக் கொண்டு தொங்குகிற போது, தேன்கூட்டிலிருந்து தேன்சொட்ட அதைச் சுவைத்து சந்தோஷப்பட்டான் என்று கதை சொல்வார்களே, அதைப்போலிருந்தது எனது சந்தோஷம்.

"காந்தா! கேட்டாயே சங்கதி? இன்னிக்கி, சுந்தரம், உங்க அக்காவுக்கு ஏன் இன்னம் கலியாணம் ஆகவில்லை என்று கேட்டான்" என்று சாந்தா கூறினாள் ஒருநாள். நான் புன்சிரிப்பை அடக்கிக்கொண்டு, ஏதோ வேலை செய்வதைப்போல் இருந்துவிட்டேன்.

"நீ என்ன பதில் சொன்னே" என்று அம்மா ஆவலுடன் கேட்டார்கள்.

"இன்னம் நல்ல இடம் கிடைக்கவில்லை என்று சொன்னேன்" என்று சாந்தா கூறினாள்.

"குட்டி, பிகுவோடுதான் பேசியிருக்கா" என்று அம்மா கூறிவிட்டு, சிரித்துக்கொண்டே என்னைப்பார்த்தார்கள்.

"சதா என்னடி அவா ஆத்திலே உனக்குவேலை" என்று நான் சாந்தாவை அதட்டினேன்.

"அது யார்வீடு? அலமு அத்தை வீட்டுக்குநான் போகாமெ வேறெ யார்போவா!" என்று கெம்பீரமாகக் கேட்டாள் சாந்தா.

"உன்னை அவா அழைக்கிறாளோ தாம்பூலம் வைத்து" என்று நான் கேலி செய்தேன்.

"தாம்பூலம், மேளதாளம், சீர்செட்டு, வரிசைஎல்லாம் வைத்து உன்னை அழைக்கப்போறாளே அலமு அத்தை, அப்போ செய்யம்மா அதிகாரம்" என்று சாந்தா பதிலுக்குக் கேலிசெய்ய ஆரம்பித்தாள்.

"வரவர நீ துஷ்டை யாகிறாய்" என்று கூறிக்கொண்டே சாந்தாவைப் பிடித்திழுத்துக் கன்னத்தைத் திருக எண்ணினேன். அவள் ஏன் பிடிக்கா அகப்படுவாள்! ஒருஓட்டமாக ஓடிப்போய், அலமு வீட்டிலே புகுந்துகொண்டாள். பார்க்கிறேன் நான், சாந்தா சோமுவிடம், ஏதோபேசிக்கொண்டு விழுந்து விழுந்து சிரிக்கிறாள். (தொடரும்.)

## ஹிந்து ஹிட்லரிசம்

2ம் பக்கத் தொடர்ச்சி.

தமிழர்! நமக்குத்தனிப் பண்புகள் உண்டு! நம்மை 'இந்துக்கள்' என்றுகூற அனுமதிப்பதால் நாம்நமக்கு எத்தகைய விடுதலையும் கிடைக்க ஒட்டாதபடி செய்து கொள்கிறோம்.

லீகின் சக்தி வளர்ந்ததற்குக் காரணம் இதுதான். முஸ்லீம்கள், தனி இனம் என்று உணர்ந்து, உரக்க உரைத்து, ஊராள்வோரின் காதுகளில் உறுத்துமாறு செய்து விட்டனர். ஆகவேதான் பிரிட்டிஷ்தூதர்கள், முஸ்லீம், இந்து என்று கூறுகின்றனர். நம்மை 'இந்து' கோஷ்டியில் சேர்த்துவிடுகின்றனர். அந்தக் கோஷ்டியிலே: நமக்கிருக்கும் நிலைமை, தாசர் நிலைதான்! சர். கிரிப்ஸ், நம்மை அந்த இந்து இட்லரிசத் திடமே ஒப்படைத்து விடத்துணிந்தால், தமிழர் முழு மூச்சுடன் எதிர்க்கவேண்டும். எந்த ஆட்சியும், இந்து இட்லரிசத்தைப்போல் கொடுமை உடையதல்ல. தாயின் கருவிலிருக்குங்காலந்தொட்டு சவக்குழி புகுந்தபின்னரும், தமிழர் மீது அந்த ஹிட்லரிசம் ஆதிக்கம் செலுத்துகிறது. தமிழர் இதனை உணரவேண்டும். இதோ சர். கிரிப்ஸ் வந்தார், முஸ்லீம்களின் மூச்சிலே ஒரு சக்தி, அவர்கள் பேச்சிலே ஒரு தீரம் இருக்கிறது. இந்தியாவின் பிரச்சினையைப்பற்றி யோசிக்க சர். கிரிப்ஸ் வந்திருக்கிறார், அந்தநேரத்தில் இதுதான் பிரச்சினை என்று திட்டமாகத் தெளிவாக, தீரமாகக் கூற, **பாகிஸ்தான் வாரம்** கொண்டாடப்படுகிறது. சர். கிரிப்ஸ் தங்கியுள்ள மாளிகை உள்ள 'டில்லியில், ஜனாப் ஜின்னா, பாகிஸ்தானுக்காக போராடுவோம் என்று முழக்கம் செய்கிறார். இதுதான் ஹிந்து ஹிட்லரிசத்திடம் சிக்காதிருக்க வழி.

இங்கோ, சர். கிரிப்ஸ் காரியுமிழும்படி, கிராப்புத் தலைவேண்டாம், குடுமியே தேவை என்று ஹிந்து ஹிட்லரிசத்தின் அதிகார வர்க்கத்தவரில் ஒருவரான, அஹோபில மடத்து ஜீயர்தாக்கீது விடுகிறார்.

நாம் இருக்கும் கேவலமான நிலைமைக்கு இதை விடவேறு உதாரணம் வேண்டுமோ! நக்கீரரே, இந்து மதம் தமிழருக்கு ஆகாது என்பதை விளக்கித் தமிழருக்குக்கூற வேண்டும், என்று நான் கூறினேன்.

"ஆகட்டும், அடுத்தவாரத்திலிருந்து அந்தப்பணியை நான் செய்கிறேன்" என்று நக்கீரன் வாக்களித்தார். அடுத்தவாரம் அவரைச்சந்தியுங்கள்.

## பாமாவின் பிரார்த்தனை

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான் வேலை பழகவேண்டும். சர்க்கார் வேலையும் சாக்கடைத்தண்ணியும்" இம்மாதிரி துண்டுதுண்டாக, சம்மந்த மற்றுத்தானுகப்பிதற்றுவதும், அழுவதும் சிரிப்பதுமாக இருந்தான் சரவணமுத்து. மகனைப்பார்த்துப் பார்த்துக்கண்ணீர் வடிக்கிறார் அப்புசாமிப்பிள்ளை. கோவை மருத்துவரை அழைத்துக்காண்பித்தார். இது வைத்தியத்தில் தீருவதல்ல "தெய்வக்குற்றம்" என்று சொல்லிவிட்டார் அவர். நவக்கிரக சாந்திசெய்தார். பல பலதெய்வங்களுக்கு "நேர்ந்து"க்கொண்டார். சொல்லுவார் சிகிச்சையெல்லாம் செய்கிறார். பயன்தெரியவில்லை!

"உயர்வு தாழ்வு என்றில்லாமல், பிராமணப் பெண்ணைச் சேர்ந்தபாவமோ, விதவையின் சேர்க்கையால் நேர்ந்த விபரீதமோ, அல்லது பிராமணன் பார்த்துவந்த சர்க்கார் வேலையை நாம் விரும்பினதால் ஏற்பட்ட வினையோ, வைத்தியத்தால் குணமாகாதென்று கோவை டாக்டரே கைவிட்டுவிட்டாரே, இனி நாம் என்ன செய்யவிருக்கிறது?" என்று நினைந்து நினைந்து நெஞ்சுருகி துன்பக்கேணியில் மூழ்கினார் அப்புசாமிப்பிள்ளை!

சரவணமுத்துவின் பைத்தியம்பற்றி ஊரில் பலரும் பலவிதமாகப் பேசினர். ஆனால் அந்த இளம் விதவை பாமா என்ன சொல்லுகிறாள்? கேட்க யாரிருக்கிறார்கள்? அந்த அநியாயத்தை அவள்தான் எப்படி வாய்விட்டுச் சொல்லுவாள்! உள்ளத்திலேவைத்து உடலுருகினாள். ஊணுறக்கம் மறந்தாள். ஒவ்வொரு நாளும் கொல்லையிலிருக்கும் துளசிமண்டபத்தின்முன் நின்று கைதொழுது கண்ணீர் வடிக்கின்றாள்! "அவள் பக்தையாய் விட்டாள், பாவங்களைப்போக்கிக்கொள்ளக் கடவுளைத் தொழுகிறாள்." என்று சொல்லுகின்றனர் அதனைப்பார்த்தோர், ஆனால் அந்தத்துளசிச்செடிக்குப் பேசவாயிருந்தால் பாமாவின் பிரார்த்தனை இவைதான் என்று ஓங்கிய குரலிற் கூறியிருக்கும்.

"தாயே! என்கணவரை நான் இழந்ததுஉண்மைதான், என்றாலும் எனது இன்பதுன்ப உணர்ச்சிகளை நான் இழந்துவிட்டேனா? இழக்காமலிருப்பது என் குற்றமாகுமா? முயன்றேன், முடியவில்லை. என்மனமாகிய வண்டு தேனுள்ள இன்பமலரை நாடிச்சென்றது. சரவணமுத்து என்ற சற்குணமலரை நுகர்ந்தேன், இன்பம்பெற்றேன், ஏனோ ஊராருக்குப் பொறுக்கவில்லை! இந்தக்கிழவனுக் கென்னவந்ததோ தெரியவில்லை. ஒரேகல்லில் இரண்டு குருவிகளை வீழ்த்திவிட்டானே பாவி! என்இன்பமும் போயிற்று, சரவணமுத்துவின் உத்தியோக ஆசையும்போயிற்றே! அவன் எவ்வளவுநல்லவன். ஐயோ! அவனுக்குப்பைத்தியம் வரும்படி மனதார மருந்து கொடுத்தானே, அந்தக் கோயம்புத்தூரான், அவன் வாழ்வானா? அவன் பெண்டு பிள்ளைகள் வாழுமா? செய்தி வெளியானால் அவன் நிலைமை என்னவாகும்? உத்தியோகம், பதவி, பட்டம், பெருமைகளெல்லாம் இந்தச்சாதிக்குத்தான் இருக்கவேண்டுமா? மற்றவர்கள் வாழக்கூடாதா? பெருமை பெறக்கூடாதா? என்ன அநியாயம்! எவ்வளவு சூழ்ச்சி! தாயே! உனக்குக்கண்ணில்லையா? கருணையில்லையா? என் சரவணமுத்துவின் பைத்தியத்தைத் தெளிவிக்கமாட்டாயா? அநியாயக்காரர்களை அழிக்கமாட்டாயா?"

ஆனால், நல்லவேளையாக அந்தத்துளசிச்செடிக்கு காதுமில்லை, பேசுந்தன்மையுமில்லை!

* (கதையில் வரும் பெயர்கள் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல.)

# தமிழ் நாடெங்கும் வெற்றிக் கொடி நாட்டி!




விவரங்களுக்கு:

சென்னை, வட, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, புதுச்சேரி, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர் நீலகிரி, காரைக்கால் ஆகிய இடங்கட்கு,

**சீனிவாஸ் பிக்சர்ஸ்,**

கான்ஸா மேட்டுத்தெரு மதுரை, என்ற இடத்துக்கும்.

கொச்சி, மலபார், மைசூர்ஸ்டேட், ஆந்திரா, எப். எம். எஸ். ஆகிய இடங்கட்கு,

**ராயல் டாக்கி டிஸ்டிரிப்யூட்டர்ஸ்,**

**மதுரை.**

என்ற இடத்துக்கும் எழுதவும்.

V

Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A at 51 Nimanthakara Street, L. Conjeeveram.